சோதனை நூலகம்
சாவகச்சேரி படிப்பகம்
...இந்து சமயம், யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C490)
SPICE
TRAVELS & TOURS (PVT) LTD
IATA
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

# தினப்பதிப்பு தினமுரசு
THINAMURASU

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 11 வெள்ளிக்கிழமை (25.03.2011) பக்கங்கள் 12+IV ஓசை - 176

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதி மீனவர்களுக்கு பாதிப்பு

### உண்மையை விளக்குகிறார் வடபிராந்திய கடற்படைத் தளபதி

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் இலங்கை மீனவர்கள் பலத்த இழப்பைச் சந்தித்து வருவதாக வடபகுதியின் கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுசித் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக வடபகுதித் தமிழ் மீனவர்களே அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

கடந்த யுத்த காலத்தில் வடபகுதி மீனவர்கள் கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக மீன்பிடித் தடையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது மீன்பிடித்தொழிலுக்குக் கட்டுப்பாடாக இருந்த அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக இலங்கையின் வடபகுதி மீனவர்கள் கடும் இழப்பை எதிர்கொள்கின்றனர். இந்திய மீனவர்கள் தங்களின் (11 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய மிகப்பெரிய போர்க்குற்றவாளி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன்

### அமைச்சர் விமல் வீரவன்ச ஆவேசம்

(கொழும்பு)



லிபியா மீது தாக்குதல் நடாத்த அனுமதியளித்த பான் கீ மூன் இன்று உலகின் மிகப்பெரிய போர்க் குற்றவாளியாகியுள்ளார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

லிபியா மீதான மேற்குலகின் தாக்குதல்களைக் கண்டித்து அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் தேசிய சுதந்திர முன்னணியினர் நேற்றுமுன்தினம் (11 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவில் இலங்கையின் புலனாய்வுப் பணி

# தமிழ் அகதிகளை இலக்கு வைத்து ஆரம்பம்

### இரு நாட்டு அரசுகளின் கூட்டு முயற்சி

(சென்னை)

**தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளைக் கண்காணிப்பதற்கு இலங்கை மற்றும் இந்திய அரசுகள் இணைந்து புதிய புலனாய்வுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளன. இதற்காக இந்திய மத்திய அரசின் பூரண ஆசீர்வாதத்துடன் நன்கு பயிற்சியும் அனுபவமும் பெற்ற புலனாய்வு அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை இலங்கை அரசு நியமித்துள்ளது.**

இக்குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பிலும் வழிநடத்தலிலும் செயற்படவுள்ளனர். எனினும் தமது செயற்பாடுகள் குறித்த பருமட்டான செயற்திட்ட அறிக்கை ஒன்றை இந்திய மத்திய புலனாய்வுப் பணியகத்திடம் இக்குழுவினர் சமர்ப்பிக்கவுள்ளனர்.

மேற்படி விசேட புலனாய்வு அதிகாரிகள் குழு மிகவிரைவில் தமிழகத்துக்குச் செல்லவுள்ளது. இவ்வாறு தமிழகம் செல்லும் மேற்படி அதிகாரிகள் இலங்கைத்தமிழ் அதிகளைக் கண்காணிக்கும் வகையிலான வலைப்பின்னல் (11 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவானமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை நேற்று அதிகாலை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் 62 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் ஜனாதிபதி வாழ்த்துக் கூறியதாக ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்தார்.

## புதிய தேர்தல் ஆணையாளராக மகிந்த தேசப்பிரிய நியமனம்



(கொழும்பு)

புதிய தேர்தல் ஆணையாளராக மகிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார். தேர்தல் ஆணையாளராக கடமையாற்றி வந்த தயானந்த திசாநாயக்க ஓய்வு பெற்றமையடுத்து மகிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரையும் மேலதிக தேர்தல் ஆணையாளராகச் செயற்பட்டு வந்த தேசப்பிரிய இன்று முதல் தேர்தல் ஆணையாளராகச் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த (11 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுச்சூழல் அபிவிருத்தி இலங்கைக்கான உதவி ரத்து

### உலகவங்கியின் அதிரடி முடிவு

(கொழும்பு)

மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளில் 7ஆவது இலக்கான "நிலைத்திருக்கும் சுற்றுச்சூழல்" என்பது பிரச்சினையைச் சந்தித்துள்ளது.

அரசாங்கம் அபிவிருத்தி முன்னுரிமைகளை சரியாக ஏற்படுத்தத் தவறியதனால் இந்தத் திட்டத்துக்கு உலக வங்கி வழங்கவிருந்த 30 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போயுள்ளது.

இலங்கை உயிர் பல்லினத் தன்மையில் உயர் வளம் கொண்டிருந்தாலும், சுற்றுச்சூழல் தொகுதி மற்றும் உயிர் பல்லினத்தன்மை ஆகியவை மோசமாக பாதிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. இலங்கை சில விடயங்களில் அதன் போக்கை மாற்றியமைத்துக் கொண்டால் நிறுத்தப்பட்ட கடன் திரும்பக் (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகத்துறை சவால்கள் நிறைந்தது; இப்படிக் கூறுகிறார் நோர்வே தூதுவர்

### யாழில் ஊடகவியல் மாணவர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சமூகத்தை பிரதிபலிக்கும் ஊடகம் பல சவால்களை எதிர்கொள்கிறது. வெளிநாடுகளில் ஊடகத்துறைக்கு பாரிய போட்டி உள்ளது. குறிப்பாக நோர்வே நாட்டில் நிறைய போட்டிகள் நிறைந்திருக்கிறது. இவ்வாறு இலங்கைக்கான நோர்வே தூதுவர் கில்டிருகுருடு சோல்ட் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் கற்கை நிலையத்திற்கு நேற்று வருகை தந்த இவர், ஊடகக் கற்கை நெறி மேற்கொள்ளும் மாணவர்களுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், யாழ்ப்பாண நிலைவரங்களை அறிவதற்காகவே இங்கு வந்தேன். சமூக வலைத்தளங்கள். வலைப்பின்னல்கள் பற்றிய பார்வை வெளிநாடுகளில் இருப்பது போன்றதான நிலைமை இங்கும் இருக்கிறதா? (11 ஆம் பக்கம் பார்க்க)

## 'கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபனம்' அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தலைநகரான கொழும்பை மையமாக வைத்து அதனை அண்மித்த ஐந்து உள்ளூராட்சி மன்றங்களை ஒருங்கிணைத்து கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபனத்தை அமைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா சமர்ப்பித்ததாக தெரிவிக்கப்பட்டது.

**மாணவச் செல்வங்களே!**

**உள்ளே கல்வி முரசு.**

**♦தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 பகுதி I,II இன் விடைகளும் கற்றல் குறிப்புக்களும் இணைக்கப்பட்டுள்ளது.**

# வடக்கின் வெளிச்சவீடுகள் விரைவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள வெளிச்ச வீடுகள் யாவும் கடந்த கால போர் நடவடிக்கைகளினால் முற்றாக அழிவடைந்துள்ளன. இதனால் கடற்றொழிலுக்குச் சென்று அதிகாலை வேளை கரைதிரும்பும் மீனவர்கள் திசை தெரியாமல் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாக அண்மையில் கொழும்பு மாளிகாவத்தையில் கடற்றொழில் நீர்வளத்துறை அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு அமைப்பு பிரதிநிதிகள் கடற்றொழில் நீர்வளத்துறை அமைச்சர் ராஜிதசேனாரத்தன. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் முறையிட்டிருந்தனர்.

வடபகுதியில் நயினாதீவு, காரைநகர், காங்கேசன்துறை, பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு வெளிச்ச வீடுகளை திருத்துவதற்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்து ஒரு மாதத்தினுள் திருத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு கடற்றொழில் உதவிப் பணிப்பாளர்களுக்கு கடற்றொழில் நீர்வளத்துறை அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். (70)


## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைத் துறைசார்ந்த வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பணியாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். ( யாழ். மாவட்டத்திற்குள்)

➢ சந்தைப்படுத்தாளர்கள்/விற்பனையாளர்கள் (Marketers/ Sale's Reps) இருபாலரும்.

- கல்வித்தகைமை G.C.E. A/L pass.
  மேற்கத்தேய நவநாகரிக ஆடை அணியக் கூடியவராயும் இருத்தல் அவசியம்.
  இருபாலார்களுக்கும் பொழுந்தும்.
- மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் விரும்பத்தக்கது.
- Fair & Handsome ஆக இருத்தல் விரும்பத்தக்கது.
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- வயது எல்லை 22-28 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கடமையின் நிமித்தம் எப்பாகத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

➢ வரவேற்பாளர் (RECEPTIONIST) பெண்.

- மும்மொழியில் தேர்ச்சி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- மிகவும் அழகானவராயும் மேற்கத்தேய நவநாகரிக ஆடை அணியக் கூடியவராயும் இருத்தல் அவசியம்.
- குறைந்தது 1-2 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கல்வித் தகைமை G.C.E. A/L Pass.
- வயது எல்லை 22-28இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

➢ அந்தரங்க காரியதரிசி (PERSONAL SECRETARY) பெண்

- வர்த்தகத் துறை சார்ந்த பட்டதாரியாக இருத்தல் விரும்பத்தக்கது.
- நிறுவனம் சார்ந்த வேலைகளில் மிகவும் இரகசிய தன்மை பேணக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- மும்மொழியில் தேர்ச்சி உள்ளவராகவும் மிகவும் சரளமாகப் பேசக்கூடியவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.
- கடமையின் நிமித்தம் எப்பாகத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வயது எல்லை 25-35 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழியில் கடிதங்கள், மின்னஞ்சல்கள் உட்பட அனைத்து வேலைகளையும் கணினியில் அதிவிரைவாக செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- மிகவும் அழகானவராயும் மேற்கத்தேய நவநாகரிக ஆடை அணியக் கூடியவராயும் இருத்தல் அவசியம்.

➢ Computer Technician (Hardware & Networking) இருபாலாரும்

- துறையில் முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- கல்வித் தகைமை G.C.E. A/L or O/L Pass
- மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் விரும்பத்தக்கது.
- வயது எல்லை 20-28 இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கடமையின் நிமித்தம் எப்பாகத்திற்கும் சென்று வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழியில் தேர்ச்சி உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய Colour Pass Port Size (மிக முக்கியம்) புகைப்படத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் துறையை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நேரம் என்பன குறுஞ் செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும்.

விளம்பரம் பிரசுரித்த திகதியில் இருந்து 7 வேலை நாட்களுக்குள் விண்ணப்பங்கள் யாவும் வந்து சேரவேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

Manager
# 138, Kanagaratnam Road, Ariyalai
Jaffna.40,000,
SriLanka.


(C/627)


# கண் சிகிச்சைப்பிரிவு வைபவ ரீதியாக திறப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலம் புனரமைப்பு இன்றி இயங்கி வந்த யாழ். போதனாவைத்தியசாலையின் கண்சிகிச்சை பிரிவு 25 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியகலாநிதி மகிபாலவினால் நேற்று முற்பகல் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வின் போது கண்சிகிச்சைப் பிரிவுக்கு தேவையான பல லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் யாழ். போதனாவைத்தியசாலைப்பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவிடம் கையளித்தார். முற்பகல் 10.00 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ் போதனாவைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் ரவிராஜ், யாழ்.போதனாவைத்தியசாலையின் கண்சத்திர சிகிச்சை நிலைய ஆலோசகர் திருமதி தர்மினி தர்மலிங்கம் மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (பா)



# குளிர்த்தி அபிஷேகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை - கோட்டுவாசல் ஸ்ரீ சந்திகா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு குளிர்த்தி அபிஷேகம் நடைபெறவுள்ளது. (100)

# விசேட கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற நகர அபிவிருத்தி ஆலோசனைச்சபைக்கூட்டமும் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெவுள்ளது. (11)

# அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப்பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை 8 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களை தவறாது கலந்துகொள்ளும்படி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சிட்டம்

## நடவடிக்கைகள் துரிதம்

(சாவகச்சேரி)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தைமுன்னிட்டு சாவகச்சேரி பிரதேசத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு பெருகும் என எதிர்பார்க்கப்படும் பல்வேறு இடங்களை சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவினர், சாவகச்சேரி வைத்திய சுகாதார பிரிவினர், இராணுவத்தினர், பொதுமக்கள், பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இணைந்து பல்வேறு சிரமதான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். பொதுமக்கள் மற்றும் பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் தத்தமது இடங்களில் சிரமதானம் மூலம் நுளம்பு பெருகும் இடங்களை அழித்து ஒத்துழைக்குமாறு சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (11)


## உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தினமுரசில் முற்றிலும் இலவசமாக!!




உங்கள் பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்.

தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச்செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மன மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன :- ..............................

பெற்றோர் ஒப்பம்.

ஆண்டவனை என்னதான் வணங்கினாலும், துதித்தாலும், கருணை இல்லாத் யாரையும் இறைவன் சொர்க்கத்தில் நுழைய அனுமதிப்பதில்லை. கருணை உள்ளவர்களைக் கடவுள் நிச்சயமாக நரகத்திற்கு அனுப்புவதில்லை. - நபிகள் நாயகம்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஐ.நா.வின் நடவடிக்கை லிபியாவில் அம்பலம்

கடந்த பெப்ரவரி மாத இறுதியில் லிபியாவில் தோற்றுவிக்கப்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சி இன்று பன்னாட்டுப் படையெடுப்புக்கு வழிவகுத்து விட்டது.

ஈராக், ஆப்கானிஸ்தான் வரிசையில் தற்போது லிபியாவும் அமெரிக்காவின் கழுகுப் பார்வைக்குள் சிக்கியுள்ளது. அதன் பார்வைக்குள் சிக்கும் நாடுகள் மீண்டெழுமா என்பது சந்தேகத்திற் கிடமாகவே உள்ளது.

ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளாயினும் சரி, சர்வாதிகார ஆட்சி அல்லது மன்னராட்சி நடைபெறும் நாடுகளாயினும் சரி, அந்நாடுகளில் இடம்பெறும் உள்நாட்டுப் போர்களில் எந்த வல்லரசு நாடு தலையிட்டாலும் அது அந்நாடுகளின் இறைமையில் கைவைத்ததாகவே கருதப்படும்.

லிபியாவின் கேணல் கடாபியின் 41 வருட கால ஆட்சியை சர்வாதிகார ஆட்சி என்று வர்ணிக்கப்படுகின்றது.

ஜனநாயக ஆட்சியாக இருந்தால் என்ன? சர்வாதிகார ஆட்சியாக இருந்தால் என்ன? அங்கு மக்கள் விரும்பும் ஆட்சி நடைபெறுமாக இருந்தால், எவரும் தட்டிக்கேட்கவேண்டிய அவசியம் இருக்க மாட்டாது.

லிபியாவில் கிளார்ச்சிக்கார்களை அடக்க முற்பட்ட கடாபி, மக்களைப் படுகொலை செய்திருக்கிறார் என்று அவர்களைப் பாதுகாக்கப் புறப்பட்டது தான் அமெரிக்க தலைமையிலான பன்னாட்டுப் படையெடுப்பு.

உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பார்கள். கடாபியின் படைகளின் தாக்குதல் ஒருபுறம் அமெரிக்கத் தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் தாக்குதல் மறுபுறம். இரண்டுக்கும் நடுவே லிபியா மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். இது என்ன கொடூரம். அந்த மக்கள் செய்த பாவம்தான் என்ன?

லிபியா இராணுவத்தினர் தாக்குதலிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக - பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் அந்த மக்களின் உயிருக்கே உலைவைத்து வருவதாக உலக நாடுகள் சில கண்டிக்கத் தலைப்பட்டுள்ளன.

"மக்களே நான் உங்களுடன் இருக்கிறேன். பயப்படாதீர்கள்" என்ற கடாபியின் சூளுரை லிபியா மக்களை சிந்திக்கவைத்துள்ளதாக மேற்குலக இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, லிபியாவுக்கு மேலாக விமானம் பறப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தடை விதிக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட போது பத்து உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவு அளித்ததாகவும், ஜி-4 நாடுகள் புத்திசாலித்தனமாக இத்தீர்மானத்தில் பங்குகொள்ளவில்லை என்ற செய்தியும் தற்போது வெளியாகியுள்ளது.

அமெரிக்க நவீன விமானம் ஒன்று லிபியப் படைகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டமை பன்னாட்டுப் படைகள் மத்தியில் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தாக்குதல்களின் வேகம் தணிந்துள்ளதுடன், உள்நாட்டில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

லிபியாவின் எண்ணெய் வளத்தைச் சுரண்டி எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட போரே இதுவெனவும், அமெரிக்காவின் இத்தகைய போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கு விசாரணைக் குழுவை நியமிப்பது யார் என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

எது எப்படி இருந்தாலும், அமெரிக்க நேச நாட்டுப் படையெடுப்பு தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகி அமையக்கூடாது என்பதே இந்த பூமிப்பந்தை அமைதிப் பூங்காவாகப் பார்க்க விரும்புபவர்களது விருப்பமாகும்.

-ஆசிரியர்-

# உங்கள் கோரிக்கைகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும்; அமைச்சர் உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் தேவைகள் குறித்து பாடசாலைச் சமூகம் முன்வைத்துள்ள தேவைப்பட்டியலில் உள்ள பாண்ட் வாத்தியத் தொகுதி, ஒலிபெருக்கித் தொகுதி, சங்கீத உபகரணத் தேவைகள் ஆகியவற்றை உடனடியாக நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வித்தியாலயத்தின் இல்லமெய் வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வித்தியாலய அதிபர் ப.கணேசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 'கல்விக் காருண்யர்' ஈ.எஸ்.பி.நாகரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

இவ்விளையாட்டுப் போட்டியில் பெருந்திரளான பெற்றோர்கள் கலந்துள்ளமை மகிழ்ச்சியைக் கொடுப்பதாகவுள்ளது. உங்களால் பட்டியலிடப்பட்டுள்ள விளையாட்டு மைதானம், உபகரணம் என்பவற்றை காலக் கிரமத்தில் நிறைவேற்றித் தருவேன் என்று கூறினார்.

வித்தியாலய அதிபர் ப.கணேசன் தலைமை உரையில் கூறியதாவது-

கொட்டடி நமசிவாய வித்தியாலயம் கல்வியில் சிறப்புப் பெற்றிருந்த நிலையில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி போன்ற கல்விமான்களை கல்விச் சமூகத்திற்கு அளித்த பெருமையை நிலைநாட்டி இருந்தது. ஆயினும் உள்நாட்டுப் போரின் காரணமாக இடைக்காலத்தில் கல்வி நிலையில் தளர்வு ஏற்பட்டாலும் தற்போது மறுமலர்ச்சி அடைந்து வருகிறது.

இவ்வித்தியாலயத்திற்குச் சொந்தமாக ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதிருந்தபோதும், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் விளையாட்டு விழாவை நடத்தும் அளவிற்குப் பெரும் தொகையான பெற்றோர்களை பார்வையாளராக வருகை தரவைக்கும் அளவிற்கு முன்னேற்றமடைந்துள்ளது. வறிய பெற்றோர்களின் பிள்ளைகளைக் கொண்ட இவ்வித்தியாலயத்திற்குத் தேவையான வளத்தேவைகள் நிறைவு செய்யப்படுமாயின் நகரில் பிரபல்யமான ஒரு பாடசாலையாக இதனை உருவாக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

## ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்களை ஒரேநாளில் நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

ஒத்திவைக்கப்பட்ட 88 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒரேநாளில் நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற மாகாண சபைகள் அமைச்சரிடம் பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகண ஹெட்டியாராய்ச்சி எழுத்து மூலமான மேற்படி தமது கோரிக்கையை நேற்றுமுன்தினம் குறித்த இருவரிடமும் கையளித்தார்.

66 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளதுடன், ஏனையவை தற்போது நடைபெற்று வரும் உலகக் கிண்ணப் போட்டிகளையடுத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய நுளம்புவார ஒழிப்பில் இராணுவமும் ஈடுபடவுள்ளது

(கொழும்பு)

தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, வடக்கு, கிழக்குப் பகுதியில் இராணுவத்தினரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல்ல தெரிவித்தார்.

நுளம்புகள் பெரும்பாலும் காடுகள் சார்ந்த பகுதிகளிலேயே பரவி வருகின்றன. எனவே வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள காடுகள் மற்றும் நீர் தேங்கி நிற்கும் ஏரிகளில், நுளம்புகள் பெருகாத வகையிலான துப்புரவுப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொள்ளவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடற்படையினரும், விமானப் படையினரும் இந்த சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கழகங்களுக்கிடையிலான போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் போட்டியில் நாளை சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு பெண்களுக்கான பூப்பந்துச் சுற்றுப்போட்டி சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை காலை 8 மணிக்கு பெண்களுக்கான எல்லேப் போட்டி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாகப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (11)

## காசநோய் தாக்கத்தால் பத்தாயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் காசநோயினால் பீடிக்கப்பட்டவர்களென பத்தாயிரம் பேர் கண்டுபிடிக்கப்பட்டதுடன் மேலும் 350 பேர் இந்த நோயின் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளதாக தேசிய காசநோய் கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் வைத்தியர் டி.அல்விஸ் தெரிவித்தார்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நோயாளர்களில் பெருமளவானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இதன்படி இம்மாவட்டத்தில் இரண்டாயிரம் பேர் இந்த நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 2 ஆயிரத்து 500 தொடக்கம் மூவாயிரம் பேர் வரையானோருக்கு இந்த நோய்த் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வினைத்திறன்காண் தடைப்பரீட்சை தொடர்பான செயலமர்வு

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண சபையின் கீழுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான 2 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை யாழ்.பண்ணையில் அமைந்துள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் மேல்மாடியிலுள்ள சுகாதாரக் கிராமப் பகுதியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வடமாகாண உதவிக் கணக்காய்வுத் தலைமை அதிகாரி கலந்துகொள்ளவுள்ளதால் சகல நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண அரச சேவையாளர் பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (11)

## இரத்ததானமும் உபகரணம் வழங்கலும்

(நெல்லியடி)

561 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் இரத்ததானமும், பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் குறித்த பிரிவு இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்யவுள்ளனர்.

அத்துடன் 350 மாணவர்களுக்கு தலா 6 அப்பியாசக் கொப்பிகளை படைப்பிரிவின் கேணல் கீர்த்திர வீரசிங்க தனது சொந்தச் செலவில் பெற்று இவற்றை மாணவர்களுக்கு வழங்கவுள்ளார். (12)

## கத்திக்குத்துக்கு ஆளானவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மண்டைதீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மதுப்பிரியர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக சரமாரியான கத்தி வெட்டிற்கு இலக்காகிய குடும்பஸ்தர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குட்டி என்று அழைக்கப்படும் குடும்பஸ்தரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் குறித்த நபரைக் கத்தியால் வெட்டிய குடும்பஸ்தர் அப்பகுதி இராணுவத்திரிடம் சரணடைந்ததாகவும் இச்சம்வம் குறித்து அப்பகுதி மக்களிடையே பரபரப்பு நிலவியதாகவும் தெரியவருகிறது. (பா)

# பிராணிகள், மனிதர்கள் மீது அன்பு செலுத்தி கடவுள் மீது நம்பிக்கை வையுங்கள்

## டெங்கு ஒழிப்பு நிகழ்வில் மாணவர்களுக்கு யாழ்.தளபதி அறிவுரை



படம்: பார்த்தீபன்

(யாழ்ப்பாணம்)

"சிறுவர்களே நீங்கள் எமது சூழலுக்கும் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் அன்பு செலுத்துங்கள். நீங்கள் வணங்கும் கடவுளை நம்புங்கள்" என சிறுவர்களுக்கு அன்புக் கோரிக்கை விடுத்தார் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க

நேற்று முன்தினம் யாழ். புகையிரத நிலையத்தில் நடைபெற்ற தேசிய டெங்கு ஒழிப்புத் திட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராணுவக் கட்டளைத் தளபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர மேயர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் அங்கு உரையாறறுகையில்:

தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டம் யாழில் ஆரம்பிக்கப்பட்டதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இதற்காக நாம் எமது ஒத்துழைப்பை வழங்குகிறோம். இந்தத் திட்டம் வெற்றி பெற உங்கள் ஒவ்வொருவரதும், விசேடமாக சிறுவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

2010 ஆம் ஆண்டு இலங்கையில் அதிகமாக யாழ்ப்பாணத்திலேயே டெங்கு நோய் காணப்படடது. அதனை நீங்களும் நாமும் ஒன்றிணைந்து வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தினோம்.

சிறுவர்களே! நீங்கள் எமது சூழலுக்கும் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் அன்பு செலுததுங்கள். நீங்கள் வணங்கும் கடவுளை நம்புங்கள் எனக் குறிப்பிட்டார்.

இங்கு சிறுவர்கள் அதிகமாகக் காணப்படுவதனால் நான் அவர்களுக்கு புதிய விதமாக ஒரு செய்தியை வழங்க எண்ணியுள்ளேன் என மேலும் தெரிவித்த அவர் தொடர்ந்து 'ஓடி விளையாடு பாப்பா' பாடலின் ஒலிப்பதிவை ஒலிபரப்பினார்.

தொடர்ந்து புகையிரத வளாகத்தினுள் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை இராணுவத்தினரும் மாணவர்களும் இணைந்து மேற்கொண்டனர்.

இதில் அவர் தனது உரையை முழுமையாக எழுதி வைத்திருந்து தமிழிலேயே உரையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். (பா)

## க.பொ.த[சா/த] பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் மாணவாகள் பெற்ற புள்ளிகள் வருமாறு:

கி.மேரி கொலஸ்ரீனா 4ஏ.பி.3சி.எஸ், ம.நிலூஜா 4ஏ.பி.சி.3எஸ், சி.கஸ்தூரி 3ஏ.பி.3சி.2எஸ், க.பிரபுராஜ் 2ஏ.4சி.எஸ், வ.டினோ சாளினி 2ஏ.பி.3சி.2எஸ், ச.நிரோமி டிலோசிகா 2ஏ.பி.3சி.3எஸ், பூ.தர்சினி 2ஏ.பி.சி.2எஸ், வி.விந்துஜா ஏ.பி.3சி.3எஸ், ஜெ.ஜயந்தினி ஏ.பி.சி.4எஸ், பூ.பிரசாந் ஏ.2பி.5சி, லோ.லபன் 5சி.3எஸ் (21)

## 141 மாணவர்கள் உயர்தரத்துக்கு தகுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திலிருந்து கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு 151 மாணவாகள் தோற்றினார்கள். இவர்களில் 142பேர் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர் என பாடசாலை அதிபர் மேரியோசேப்பின் சந்தியாப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஒன்பது பேர் 9 ஏ, ஐவர் 8 ஏ சித்திபெற்றுள்ளனர்.

9ஏ சித்தியடைந்துள்ளவர்களின் விபரம் வி.காயத்திரி, ச.கீர்த்திகா, செ.பவித்திரா, வி.பிரமிளா, ச.தக்சனா, பி.துசாணி, வி.விஜிதா, ம.சம்பிரதா, செ.தனுஷா. 94 சமவீத மானவர்கள் கணித பாடத்தில் சித்தியடைந துள்ளனர் எனவும் அதிபர் தெரிவித்தார்.

## கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள்

(யாழ்.நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலை அபிவிருத்திக் குழுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு இணங்க அமைக்கப்படும் அபிவிருத்திக் குழுக்களில் பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோாிலிருந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

வலயக்கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவரும் இந்த நிர்வாகக் குழுவில் இடம்பெறுவார்.

பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரத்திற்கேற்ப பெற்றோரிலிருந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். (10)

## திருநிலைப்படுத்தப்படுவோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சொல மன் நிர்மலன், ஏனைய மாவட்டங்களைச்சேர்ந்த J.ஜெயசீலன், S.தேவசீலன், சுரேந்திரகுமார், மு.யூட் பெகின் ஆகியோருக்கு திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட துணை ஆயர் அதி.வண.ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் நீர்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்தில காலை 7 மணிக்கு குருக்களாக திருநிலைப்படுத்தும் சடங்கு இடம்பெறவுள்ளது. (21)

## உடற்கல்வி போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற்கல்விப் போட்டிகள் நேற்று முன்தினம் (23.03) புதன்கிழமை கிளி/மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் உடற்கல்விப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 1 ஆம் இடத்தை கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயமும் 2ஆம் இடத்தை கிளி/தருமபுரம் மகாவித்தியாலயமும், 3 ஆம் இடத்தை கிளி/விவேகானந்தா அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் முதலாம் ஆம் இடத்தை கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் 2 ஆம் இடத்தை கிளி/இராமநாதன் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், 3 ஆம் இடத்தை கிளி/தருமபுரம் மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (69)

## தாதியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள அரச முதியோர் இல்லத்திற்கு தாதியர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கண்டி வீதி, கைதடி எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண உள்ளூராட்சி அமைச்சில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைகக்கப்பட்டோர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், க.பொ.த(சா/த) சான்றிதழ், சேவைச்சான்றிதழ், ஆகியவற்றின் மூலப்பிரதியுடன் நிழற்பிரதியும், தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியும், கிராம அலுவலரின் சான்றிதழ், மற்றும் தற்போது அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரெனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் ஆகியவற்றுடன் சமூகமளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ் சிறு செய்திகள்

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சாராயத்தினை அனுமதிப்பத்திரமின்றி யாழ்.நகரில் விற்பனை செய்த இரண்டு நபர்களை யாழ்ப்பாணப் பொலிசார் கைது செய்து யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த யாழ்ப்பாண மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர் ஒருவருக்கு 5000 ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (மி)

## சிரமதானப்பணிகளில் ஈடுபடவில்லை

(கிளிநொச்சி)

தற்போது டெங்கு ஒழிப்பு வார சிரமதானப் பணிகள் நடைபெறறுவரும் நிலையில், கிளிநொச்சி வலய கல்வித் திணைகள பணியாளர்களில் பலர் இச் சிரமதானப் பணிகளில் கலந்து கொள்வது இல்லையெனச் சிற்றூழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உயிர்கொல்லி நோயான டெங்கினைக் கட்டுப்படுத்த இதயசுத்தியுடனும் சமூகப்பற்றுடனும் அனைவரும் செயற்படுவது அவசியமானதாகும். (69)

## தீ மிதிப்பு வைபவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா இறம்பைக்குளம் கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவம் கடந்த சனி மாலை 6 மணியளவில் ஆலய முன்றலில் பக்தி பரவசத்துடன் இடம்பெற்றது.

அதற்கு முன்னர் வசந்த மணடபத்தில் விசேட பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் ஊர்வலம் வந்ததும் தீமிதிப்பில் பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

## மொழிப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மது வரித்திணைக்கள தமிழ் உத்தியோகத்தர்கள் 30 பேருக்கு சிங்கள மொழிப் பயிற்சியினையும் தென்பிராந்தியத்தைச் சேர்ந்த 30 சிங்கள மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப்பயிற்சிகளையும் வழங்குவதற்கான செயலமர்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தற்போது நடைபெற்றுவருகின்றது.

## மோசமான நிலையில் ஜெயந்திநகர் வீதிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஜெயந்தி நகர் கிராமத்தின் அனைத்து வீதிகளும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இவ் வீதியூடாக கனரக வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே இது விடயத்தில் உரிய கவனம் செலுத்திச் செயறபடுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரைப் பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (69)

## யானைகள் தொல்லை

(வவுனியா நிருபர்)

நெல்வேளாண்மை அறுவடை செய்யப்படும் இத் தருணத்தில் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அயல் கிராமங்களில் யானைகளுடைய தொல்லை அதிகரித்துள்ளது என உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். இரவில் தாம் அச்சத்துடன் வாழ்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

# யுத்தப் பாதிப்புக்குள்ளான எமக்கு உதவிக் கரம் நீட்டுங்கள்

## பனை தென்னை வள கூ.சங்கத் தலைவர் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 1996 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல இடர்களையும், பல அழிவுகளையும் சந்தித்து, குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சொத்துக்கள், பொறுப்புக்கள், தளபாட உபகரணங்கள், வாகனங்கள், நிதிகள் போன்ற அனைத்தையும் இழந்து மீண்டும் 2010 பெப்ரவரி தொடக்கம் இயங்கத் தொடங்கி, பனந் தொழில் வல்லுநர்கள் ஐம்பது பேரும், மகளிர் குழு உறுப்பினர்கள் எண்பது பேரும் இணைந்த உழைப்போடு இச்சங்கம் மீண்டும் துளிர் விட ஆரம்பித்துள்ளது. ஏழு கிளைகளுடனும், இருபதிற்கு மேற்பட்ட பணித் தொகுதியுடனும் செயற்படும் இச்சங்கத்தின் பொருளாதார மேம்பாட்டை உச்ச நிலைக்குக் கொண்டு வரவும், இந்நிறுவனத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமாயின் எமது தேவைகளை நிறைவு செய்வதன் மூலம், இச்சங்கத்தை பொருளாதார ரீதியாக உச்ச நிலைக்கு உயர்த்த முடியும் என சங்கத்தின் தலைவர் இ.ஜெயகாந்தன் தெரிவித்தார்.

சங்கத்தின் தேவைகளாக: எமது சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமான காணி ஒன்று கிடைத்த நிலையிலும், அக்காணியில் ஒரு தலைமை அலுவலகத்தை அமைக்க முடியாத நிலையில் உள்ளோம். எனவே எமக்கான தலைமை அலுவலகம் அமைப்பதற்குரிய நிதி ஏற்பாட்டினை மேற்கொண்டு உதவுதல், எமது சங்கம் தற்போதுகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்குரிய காணி ஏற்பாட்டையும், கட்டட தளபாட உபகரண ஏற்பாடுகளையும் செய்து உதவுதல,

எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழுவினர் மிகவும் வறிய நிலையில் இருப்பதனால், அனைவருக்குமான துவிச்சக்கர வண்டிகளை கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊடாக வழங்க ஆவன செய்து உதவுதல்,

எமது சங்கத்தில் மூன்று மகளிர் குழுக்கள் உள்ளன. இவர்களில் மதியாமடு பகுதியில் 30 இற்கு மேற்பட்ட மகளிா குழுவினருக்கு அவாகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அப்பகுதி மகளிர் குழுவினர்களுக்கு பனை தென்னைசார் கைப்பணிப் பயிற்சி நெறியினை நடத்துவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உதவுதல், எமது சங்கம் நீண்ட தொழிற் பரப்பைக் கொண்ட சங்கமாகும்.

எமது உற்பத்திகளை ஏற்றி இறக்குவதற்கும் ஏனைய சேவைத திட்டங்களுக்கும் நாம் பயன்படுத்தச் சொந்தமாக ஒரு உழவு இயந்திரமும், பெட்டியும் கிடைக்க வழிதேடித் தருதல் போன்ற எமது வேண்டுகோள் அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்ள பனை அபிவிருத்திச் சபை தகுந்த ஏற்பாடுகளைச் செய்து உதவ வேண்டுமென தலைவர் தெரிவித்தார்.

## கற்கோவளம்-மாதனை வீதியை மாணவர்கள் துப்புரவு செய்தனர்

(தும்பளை)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக தும்பளை தெற்கு கிராமத்தின் ஊடாகச் செல்லும் கற்கோவளம்-மாதனை வீதி துப்புரவு செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் இயங்கும் "தமிழொலி" மாணவர் மன்ற மாணவர்களால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நடவடிக்கையின்போது சிறு பற்றைகள் வெட்டப்படும், வீதியில் இருமருங்கிலும் கொட்டப்பட்டிருந்த பொலித்தீன் பைகள், எரியூட்டப்பட்டும் இரும்புப் பொருட்கள் வெட்டிப் புதைக்கப்பட்டும் வீதி அழகாகக் காட்சி தருவது குறிப்பிடத்தக்கது. (மா)

## எழுத்தாக்கப் போட்டிகள்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கைத் தமிழ்த் தினப்போட்டி 2011இன் யாழ்வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கோட்டமட்ட எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கு யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்திலும், நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு யா.இந்து மகளிர் கல்லூரியிலும், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் எழுத்தாக்கப் போட்டிகள் நடைபெறும். எழுத்தாக்கப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் விபரங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைகுமாறு யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

## காணிக் கொள்வனவில் சிரமம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக் கிளைக்கான நிரந்தக் கட்டடம் ஒன்றை அமைக்க நிலம் கொள்வனவு செய்வதில் கஷ்டநிலை காணபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிளைக்கான நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பது குறித்து வங்கித் தலைவர் தெரிவித்துள்ள போதிலும் அதற்கான உரிய நிலத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளதாகவும், இதனால் இவ்வங்கிக்கான நிரந்தரக் கட்டடம் அமைபதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

## ஆசிரிய நியமனங்கள் வழங்கத் தீர்மானம்

(யாழ்.நிருபர்)

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி மற்றும் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்தவர்களுக்கு அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரிய நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி கற்கைநெறிகளை நவீனமயப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு காணும் வகையிலேயே இந்த டிப்ளோமாப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (10)

## புத்தாண்டில் சுதேச விளையாட்டுப் போட்டி

(யாழ்.நிருபர்)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு காரைநகர் கடற்படையினர் சுதேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

அண்மையில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசமான பலுகாடு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் எதிர்வரும் 9 ஆம்,10 ஆம் திகதிகளில் சுதேசிய விளையாட்டு விழா நடைபெறும் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளோர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (10)

## ஆதினியின் இன்றைய பலன்

(25.03.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 11
இராகுகாலம் 10.45– 12.15,
சுப நேரம் 6.15–7 .45,
ஷஷ்டி பி.ப.12.42, கேட்டை,
மரணயோகம் பி.இ.2.20.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– மகிழ்ச்சிப் பெருக்கு, தலயாத்திரை, பணவரவு.

ரிஷபம்:– பெரியோர் மதிப்பு, காரிய சித்தி, பெருமை.

மிதுனம் :– வெகுமதி கிடைத்தல், மேலோர் உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி.

கடகம்:– காரியசித்தி, சுபச் செய்தி, தடைகள் நீங்கல்.

சிம்மம்:– நண்பர் சந்திப்பு, மனமகிழ்ச்சி, பணவரவு.

கன்னி :– அதிக முயற்சி, அதிகலாபம், மதிப்பு உயர்வு.

துலாம் :– மனமகிழ்ச்சி, பெரியோர் ஆசி, காரிய சித்தி.

விருச்சிகம்:– போட்டிகளில் வெற்றி, பகை நீக்கம், நண்பர் உதவி.


தனுசு:–பணிகள் அதிகரிப்பு, விதண்டாவாதம், அரச பயம்.

மகரம்:– நிலை உயர்தல், செய்தியால் நன்மை, மேலாளர் பாராட்டு.

கும்பம் :– அச்சமான நிலை, பொருள் இழப்பு, நட்டமடைதல்.

மீனம்:– வீண் செலவு, காரியத் தடை, குதர்க்க வாதம்.

## காரைநகர் வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு



(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக சங்கத்தின் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த 21 ஆம் திகதி காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

முன்னாள் வர்த்தக சங்க உபதலைவர் தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கத்தின் புதிய தலைவராக க.சிறிஸ்காந்தநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன், காரைநகர் ஈ.பி.டி.பி அமைப்பாளர் ரஜனி, கெமுனு படைத்தரப்பைச் சேர்ந்த லெப்ரினன் கொமாண்டர் ஹம்பிக்க, காரைநகர் கடற்படை மக்கள் தொடர்பு அதிகாரி குமாரசிங்க, கிராமசேவையாளர்களான திருப்புகழூர் சிங்கம், திருமதி பா.நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொலை, கொள்ளைகளைத் தடுப்பதற்கு விழிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும்

(யாழ்.நிருபர்)

காரைநகரில் இடம்பெறும் கொலை, களவு சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொதுமக்களும், வர்த்தகர்களும் படையினருடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கினால் அவற்றை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேச அமைப்பாளர் ரஜினி தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச வர்த்தக சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்- இப்பிரதேசத்தில் அண்மைக் காலமாக கொள்ளைகள், கொலைகள், கலாசார சீரழிவுகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்நடவடிக்கையைத் தடுப்பதற்கு பொதுமக்கள், வர்த்தகர்கள் இணைந்து படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கினால் இந்த அசம்பாவிதங்களைத தடுத்து நிறுத்துவதோடு அதனை வேரோடு பிடுங்கி எறிவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் விழிப்புக்குழு அமைக்கப்பட்டு அவை தற்போது செயற்பட்டு வருகின்றன. அவ்வாறு எமது பிரதேசத்திலும் இவ்வமைப்பை உருவாக்கி எமது மக்களுக்கு நிம்மதியான ஒரு சூழலை ஏற்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அனைவரும் உழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ்.மாவட்ட நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட "யாழ்.எயிட்" அமைப்பு மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிப் பொருள் வழங்குவதையும், உதவிப் பொருட்களுடன் மாணவர்களையும் காணலாம்.

# கிளர்ச்சியாளர் வசமுள்ள நகரைக் கைப்பற்ற லிபிய இராணுவம் கடுமையான தாக்குதல்!


(திரிபோலி)

**கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள மிக முக்கிய நகரான அஜ்டாபியாவைக் கைப்பற்றும் வகையில் அப்பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இப்பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி அரச படைகள் கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இந்த ஷெல் தாக்குதல்களால் மக்களின் வீடுகளும் எரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, லிபியா மீது நடத்தப்படும் விமானத் தாக்குதல்களால் பொதுமக்கள் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் எதுவும் வரவில்லையென இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பான அமெரிக்கத் தளபதி ஜெராட் ஹியூபர் தெரிவித்தார்.

இதனிடையே லிபியா ஜனாதிபதி பதவியிலிருந்து கேணல் கடாபி உடனடியாக விலகுவதுடன், அவர் நாட்டைவிட்டும் செல்லவேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.



## பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் ஐவர் உடல் சிதறிப் பலி; 25 பேர் காயம்

(பெஷாவர்)

பாகிஸ்தானில் நேற்றுக் காலை நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் 5 பேர் உடல் சிதறி பரிதாபமாகப் பலியாகினர், 25 பேர் படுகாயமடைந்தனர். வடமேற்கு பாகிஸ்தானில் ஹங்கு மாவட்டத்தில் இருக்கும் ஒரு பொலிஸ் நிலையம் மீது காரில் வந்த தற்கொலைதாரி வேகமாக மோதி தன் மீது கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தான். இந்தச் சம்பவத்தில் 5 பேர் இறந்தனர். காயமடைந்த வர்கள் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. குண்டு வெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.




## சவுதி அரேபியாவில் விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

(ரியாத்)

சவுதி அரேபியாவில் விரைவில் உள்ளூராட்சித்தேர்தல்நடைபெறும் என்று அரசின் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.மேலும் வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறலாம் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. தொடர்ந்து தேர்தலில் பெண்களின் பங்களிப்பு என்ன என்பது அரசின் அறிவிப்பின் பின்னர் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக கடந்த 40 ஆண்டுகால அரசியலில் கடந்த 2005ஆம் ஆண்டு முதன் முறையாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெற்றது. அதில் பெண்கள் பங்கேற்றனர். இருப்பினும் அரசியல் ரீதியாக வெற்றி பெற முடியாமல்போனது. தொடர்ந்து 2009ஆம் ஆண்டு மீண்டும் உள்ளூராட்சித்தேர்தலை நடத்த முடிவு செய்த போது பல்வேறு காரணங்களால் அதுவும் ஒத்திவைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது தேர்தலை நடத்திவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் அல்லது அக்டோபர் மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கதிர்வீச்சு அபாயம் காரணமாக ஜப்பான் உணவுக்கு அமெரிக்கா தடை

(வொஷிங்டன்)

ஜப்பானில் தண்ணீர், பால் மற்றும் உணவுப் பொருட்களிலும் கதிர்வீச்சு பரவியுள்ளது. இவற்றை மனிதர்கள் சாப்பிட்டால் அவர்களையும் கதிர்வீச்சு பாதிக்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே கதிர் வீச்சு பாதித்த பொருட்களை அழித்து வருகின்றனர். ஜப்பானில் இருந்து வெளி நாட்டுக்கு அனுப்பப்படும் பொருட்களிலும் கதிர்வீச்சு பாதிப்பு இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனவே இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஜப்பானில் இருந்து வரும் உணவுப் பொருட்களைச் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் ஜப்பானில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளது. ஜப்பான் உணவுப் பொருளுக்கு அமெரிக்காதான் முதல் முறையாக தடை விதித்து உள்ளது.

சிங்கப்பூர், ஜப்பானில் இருந்து பால் உணவு மற்றும் இறைச்சிகளை இறக்குமதி செய்து வந்தது. அணுக் கதிர்வீச்சு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இந்தப் பொருட்களுக்கு சிங்கப்பூர் தடை விதித்துள்ளது.

அதே போல அவுஸ்ரேலியாவும் தடை விதித்துள்ளது. கனடா, ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, நெதர்லாந்து, சீனா போன்ற நாடுகளில் ஜப்பான் பொருட்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

## 10 ஆண்டுகளாக முன்னேற்றமில்லை

(டாக்கா)

கடந்த 10 ஆண்டுகளாக மேற்கிந்தியத்தீவுகள் அணியில் எந்த முன்னேற்றமும் இல்லை. அதே நிலை தான் உள்ளது என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பயிற்றுநர் கிப்சன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மோசமான ஆட்டம் மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. தலைவர் சமி இந்த மோசமான தோல்வியால் கடும் விரக்தியில் உள்ளார். எனவே தான் நான் உங்களைச் (நிருபர்கள்) சந்திக்கிறேன்.

மோசமான துடுப்பாட்டம், நம்பிக்கையின்மை ஆகியவையே தோல்விக்குக் காரணம்.




மூத்த வீரர்கள் சரியாக ஆடவில்லை. அவர்களது ஆட்டம் எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. எங்கள் அணியில் உள்ள முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் யாருமே சரியாக விளையாடவில்லை. சச்சினைப் பார்த்துப் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். மூத்த வீரரான அவர் கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆட்டத்திலும் ஓட்டங்களை எடுக்கிறார் , என்றார்.

## இலங்கை அணிக்கு அதிக வாய்ப்பு

(கொழும்பு)


இலங்கை அணிக்கு உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளது என முன்னாள் தலைவர் அர்ஜுனா ரணதுங்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரணதுங்கா மேலும் கூறியதாவது: லீக் சுற்றில் இலங்கை அணி சிறப்பாக செயற்பட்டது. இது அடுத்து வரவுள்ள விலகல் சுற்றிலும் தொடரும் என நம்புகிறேன். இம்முறை இலங்கை அணிக்கு உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. இதற்கு காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகளைச் சொந்த மண்ணில் விளையாட இருப்பது சாதகமான



விடயம். ஆசிய மண்ணில் இலங்கை அணியினர் சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். எனவே எங்கு விளையாடுகிறோம் என்பது பெரிய கவலை அளிக்காது. ஏனெனில் கடந்த 1996இல் கிண்ணத்தை வென்ற இலங்கை அணி காலிறுதிப் போட்டியை பைசலாபாத்திலும் (பாகிஸ்தான்), அரையிறுதிப் போட்டியை கொல்கத்தாவிலும் (இந்தியா) விளையாடியது. இங்கிலாந்து வீரர்கள் சுழலில் திணறக் கூடியவர்கள். இருப்பினும் இ ஸ்டிராஸ், டிராட் உள்ளிட்டோர் துடுப்பாட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். எனவே இவர்களுக்கு, மிகுந்த கவனமுடன் பந்துவீச வேண்டும். முரளிதரன், மெண்டிஸ் உள்ளிட்ட திறமையான சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது பலம் என்றார்.

## எங்களுக்கு நெருக்கடி



(டாக்கா)

சிறப்பாக ஆடவேண்டும் என்ற நெருக்கடி எங்களுக்கு அதிகம் இருக்கின்றது. இருப்பினும் அடுத்து வரும்போட்டிகளில் சிறப்பாக ஆடுவோம் என பாகிஸ்தான் பயிற்றுநர் வக்கார் யூனிஸ் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

' ரசிகர்களின் பலத்த ஆதரவு எங்களுக்கு இருந்தது. மொகாலியில் நடைபெறும் அரை இறுதிப் போட்டியைக் காண பாகிஸ்தானில் இருந்து ரசிகர்கள் வருவார்கள். தற்போது பாகிஸ்தான் அணி சிறப்பாக விளையாடுவதால் மேலும் நன்றாக ஆட வேண்டும் என்ற நெருக்கடி அதிகமாக இருக்கிறது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கடந்த போட்டிகளில் சிறப்பாக விளையாடாத போதிலும் காலிறுதிப் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டனர் என்றார்.

## இலக்கு இரண்டு



(டாக்கா)

எங்களுக்கு இன்னும் இரண்டு இலக்கு இருக்கின்றது. அந்த இலக்கு நோக்கி நாங்கள் உறுதியோடு நகருவோம் என பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகக் கிண்ண அரை இறுதி, இறுதிப் போட்டி இந்தியாவில் நடக்கிறது. நாங்கள் இந்தியாவில் விளையாடத் தயாராகிவிட்டோம். பாதுகாப்புக் குறித்து எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. இதுவரை நாங்கள் சிறப்பாகவே ஆடி வந்திருக்கின்றோம். அடுத்து இரண்டு இலக்குகள் இருக்கின்றன. அந்த இலக்கை எட்டுவதற்கு எங்களாலான கடும் முயற்சியை மேற்கொண்டு அதற்காக ஒருங்கிணைந்து உழைப்போம் ஏன்றார்.

## சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

**எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பிபெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.**

ICC Cricket World Cup 2011

**1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?**

**2) இப்போட்டித்தொடரில்," தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?**

பெயர்: ....................

முகவரி : ....................

போ.இல : ....................

விடைகள் : 01) ....................


02) ....................

**உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.**

**தினமுரசு காரியாலயம்**
**373, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தினமுரசு விளம்பரப்பணிமனை**
**M.P.C.S. கட்டடம்**
**127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.**



# அவுஸ்ரேலியாவுக்கு ஆப்பு! அரையிறிதியில் இந்தியா!!

(அகமதாபாத்)

பத்தாவது உலகக் கிண்ணத்தின் இரண்டாவது காலிறிதிப் போட்டி மினி இறுதிப் போட்டி என வர்ணிக்கப்பட்ட போதிலும், அரையிறிதியில் நாங்கள் மோதும் போட்டி தான் மினி இறுதிப் போட்டி என்பதை இந்திய அணி, அவுஸ்ரேலிய அணிக்கு ஆப்பு வைத்ததன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

அகமதாபாத்தில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்ரேலிய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றது. இந்த முடிவு இந்திய அணி ரசிகர்களுக்கு சிறு அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்திருக்கும் என்றே நம்பலாம்.

மிக நிதானமாக ஆடிய அவுஸ்ரேலிய அணி சீரான இடைவெளிகளில் விக்கெட்டுக்களை இழந்தது. இருந்த போதிலும் மறுமுனையில் அணித் தலைவர் பொண்டிங், தனது தலைமைக்கும், அணிக்கும் கௌரவத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் மிகப் பொறுமையாக ஆடினார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் பொண்டிங் (104) தனது 30ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். மற்றும் ஹடின் 53, டேவிட் ஹசி 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பாகிஸ்தானுடனான போட்டியில் டேவிட் ஹசியை அணியில் இணைத்திருக்க வேண்டும் என்ற நிலையில், ஆஸி தெரிவுக் குழுவிற்கு ஏற்படுத்தும் அளவிற்கே அவரின் ஆட்டம் அமைந்தது. பந்து வீச்சில் வழமை போன்று சகீர்கான், யுவராஜ் சிங், அஸ்வின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியிலக்கு இந்திய அணியைப் பொறுத்தும், அதன் ரசிகர்களைப் பொறுத்தும் விரட்டக் கூடிய இலக்காகவே கொள்ளப்பட்டது. ஏனெனில், பொதுவில் இந்திய அணியின் பலமே துடுப்பாட்டம்தான்.


இதற்கமைய களமிங்கிய இந்திய அணி வழமையான ஆரம்பமும், யுவராஜ்சிங்கின் தொடர்ச்சியான பொறுப்பான ஆட்டமும் இந்திய அணிக்கு இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இறுதி வேளைகளில் எவ்வாறு விளையாட வேண்டும் என்பதையும், இதுவரை நடைபெற்ற போட்டிகளில் என்னை அணியில் இணைத்திருந்தால் இவ்வாறான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருப்பேன் என்பதை உணர்த்தும் வகையில் சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் அமைந்ததை இந்த இடத்தில் நிச்சம் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். இனிவரும் போட்டிகளில் அவரைத் தவிர்த்து அணித் தெரிவு இருக்காது என்றே நம்பலாம்.

இறுதியில் 47.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சச்சின் 53 ஓட்டங்களைப் பெற்றார். இவர் நேற்று சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 18000 ஓட்டங்களைக் கடந்தார். மற்றும் கௌதம் கம்பீர் 50, யுவராஜ் சிங், ரெய்னா ஆட்டமிழக்காது முறையே 57, 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரெட்லீ, வொட்சன், டேவிட் ஹசி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனான யுவராஜ் சிங் தெரிவானார்.

அவுஸ்ரேலிய அணியின் தொடர்ச்சியான ஆதிக்கத்திற்கு நேற்று முடிவு காட்டப்பட்டுள்ளது. கடந்த மூன்று உலகக் கிண்ணத் தொடர்களில் கிண்ணத்தை வென்ற அணி, காலிறிதியுடன் வெளியேறுவது அதன் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்திருக்கும். ஆனால், கிரிக்கெட் தெரிந்த அனைவருமே அவுஸ்ரேலிய அணியின் நிலையை உணர்ந்திருப்பர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பொற்காலத்திற்கு எவ்வாறு உலகக் கிண்ணத் தொடரில் ஒரு முற்றிப்புள்ளி வைக்கப்பட்டதோ அதே போன்று இந்தப்பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில், அவுஸ்ரேலிய அணியின் தனிச் சாம்ராஜ்யத்திற்கு முற்றிப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஆஸி அணியில் பல மாற்றம் எதிர்வரும் நாட்களில் அமைந்தாலும் அணியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அதிக காலங்கள் எடுக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, உலகக் கிண்ணத் தொடரின் அரையிறிதிப் போட்டியில் பாகிஸ்தானும், இந்தியாவும் வரும் 30ஆம் திகதி மோதவுள்ளன. இந்தப் போட்டியே மினி இறுதிப் போட்டியாக, ஏன் இத்தொடரின் சிறப்புமிக்க போட்டியாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.



## இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா எதிர் நியூசிலாந்து

மைதானம் :டாக்கா
பகலிரவு ஆட்டம்

ICC Cricket World Cup 2011

## நாளைய ஆட்டம்

இலங்கை எதிர் இங்கிலாந்து

மைதானம் : கொழும்பு
பகலிரவு ஆட்டம்

## தினமுரசு பாகிஸ்தான் எதிர் மே.தீவுகள்

## SCORE CARD

மைதானம் : அகமாதாபத் திகதி : 24-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி அவுஸ்ரேலியா : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) வொட்சன் | b அஸ்வின் | 25 |
| 02) ஹடின் | c ரென்யா b யுவராஜ்சிங் | 53 |
| 03) ரிக்கி பொண்டிங் | c சகீர்கான் b அஸ்வின் | 104 |
| 04) மைக்கல் கிளார்க் | c சகீர்கான் b யுவராஜ்சிங் | 08 |
| 05) மைக் ஹசி | b சகீர்கான் | 03 |
| 06) வைற் | c&b சகீர்கான் | 12 |
| 07) டேவிட் ஹசி | not out | 38 |
| 08) ஜோன்சன் | not out | 06 |
| 09) பிரெட்லீ | | |
| 10) கிரெய்ஜா | | |
| 11) டெய்ட் | | |
| உதிரிகள் | (lb 2, w 9) | 11 |
| மொத்தம் | (6 W : 50 ஓவர்கள்) | 260 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) வி. சேவாக் | c மைக் ஹசி b வொட்சன் | 15 |
| 02) சச்சின் டெண்டுல்கர் | c ஹடின் b டெய்ட் | 53 |
| 03) கௌதம் கம்பீர் | run out வைற் / டேவிட் ஹசி | 50 |
| 04) ஹோலி | c கிளார்க் b டேவிட் ஹசி | 24 |
| 05) யுவராஜ்சிங் | not out | 57 |
| 06) டோனி | c கிளார்க் b பிரெட்லீ | 07 |
| 07) சுரேஷ் ரெய்னா | not out | 34 |
| 08) அஸ்வின் | | |
| 09) ஹர்பஜன்சிங் | | |
| 10) சகீர்கான் | | |
| 11) முனாப் பட்டேல் | | |
| உதிரிகள் | (lb 3, w16, nb 2) | 21 |
| மொத்தம் | (5 W : 47.4 ஓவர்கள்) | 261 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| அஸ்வின் | 10 | 52 | 02 |
| சகீர்கான் | 10 | 53 | 02 |
| ஹர்பஜன்சிங் | 10 | 50 | 00 |
| முனாப் பட்டேல் | 07 | 44 | 00 |
| யுவராஜ்சிங் | 10 | 44 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பிரெட்லீ | 8.4 | 45 | 01 |
| டெய்ட் | 07 | 52 | 01 |
| ஜோன்சன் | 08 | 41 | 00 |
| வொட்சன் | 07 | 37 | 01 |
| டேவிட் ஹசி | 05 | 19 | 01 |

5 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி. ஆட்டநாயகன் : யுவராஜ்சிங்

அனுசரணையாளர்:
EDWARD MAKES (எட்வேட் மேக்கர்ஸ்)
Manufacturers Siddha Ayurvedic Medicine & Pharmaceuticals
* Pain Oil * Red Ointment * Guru Sancheevi * Gorochana Pills * Thooth Achgo Thylum
* Vaza Syrup * Minth Thylum * Mum Mathirai * Kiranthi Mathirai * Thres Koonthal Thylum
எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
T.P. 021 222 8171 (C/626) 63, Grusault Road, Chundukkuli, Jaffna.
ICC Cricket World Cup 2011

# தி.மு.கவுக்கு சளைக்காத வகையில் அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை



(திருச்சி)

திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த அ.தி.மு.க., பொதுச்செயலாளர் ஜெயலலிதா, பின்னர் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். தி.மு.க.,வுக்கு சற்றும் சளைக்காமல் அ.தி.மு.க.தேர்தல் அறிக்கையில் ஏராளமான சலுகைகள் இடம்பெற்றுள்ளன. குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் மாதந்தோறும் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்றார்.

பிளஸ் 1, பிளஸ் 2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக லப்ரொப் வழங்கப்படும். மேலும் கலை, அறிவியல் அரசு மற்றும் தனியார் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச லப்ரொப் வழங்கப்படும். சாதிச் சான்றிதழ், இதர சான்றிதழ்கள் பள்ளியிலே வழங்கப்படும். அரசு பள்ளி மாணவர்களுக்கு 4 செட் சீருடையும், காலணியும் இலவசமாக வழங்கப்படும் என்றார். 10 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு, தனியார் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ஆகியன தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது. பள்ளி செல்லும் மாணவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படும்.

கேபிள் டிவி., அரசுடைமையாக ஆக்கப்படும். இத்தொழிலில் இருக்கும் ஏகபோகம் தடுக்கப்படும். அனைவருக்கும் இலவச கேபிள் டி.வி., இணைப்பு வழங்கப்படும்.

இல்லத்தரசிகளுக்கு பான், மிக்சி, கிரைண்டர் ஆகியன இலவசமாக வழங்கப்படும். நடமாடும் மருத்துவமனைகள் வீடு தேடி வந்து சிகிச்சை அளிக்கும். ஏழை மக்கள் வீடுகட்ட ரூ.1.8 லட்சம் பணம் மானியமாக வழங்கப்படும். மகளிருக்கு பேறுகால உதவித் தொகையாக ரூ. 12 ஆயிரம் வழங்கப்படும். அரசு ஊழியர்களுக்கு பேறுகால விடுப்பு ஆறு மாத காலமாக நீட்டிக்கப்படும். 58 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச பஸ் பாஸ். திருமண உதவித் தொகை ரூ. 25,000 வழங்கப்படும். மேலும் 4 கிராம் தங்கம் வழங்கப்படும்.

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் 4 ஆண்டு காலத்தில் மும்முனை மின்சார இணைப்பு தரப்படும். கரும்பு கொள்முதல் விலை தொன்னுக்கு ரூ. 2500 ஆக உயர்த்தப்படும். அரசு கரும்பு ஆலைகள் நவீனமயமாக்கப்படும். நிர்வாகம் சீரமைக்கப்படும். வீடு, தொழில், விவசாயத் திற்கு தேவையான மின்சாரம் தடையின்றி வழங்கப்படும். மின்சார திருட்டை ஒழிக்க முன்னாள் ராணுவத்தினர் அடங்கிய மின்சார பாதுகாப்புப் படை அமைக்கப்படும்.

அரசு ஊழியர்கள் நலன்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும். அனைத்து குறைபாடுகளுக்கும் பேச்சு வார்த்தை மூலம் அவ்வப் போது தீர்வு காணப்படும்.

இதேவேளை ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடும் ஜெயலலிதா நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்ய வந்த போது இவருடன் வந்த அ.தி.மு.க., தொண்டர்கள் மீது செருப்பு வீசப்பட்டதால் .அ.தி.மு.க., - தி.மு.க., தொண்டர்கள் மோதும் சூழல் ஏற்பட்டது. இதனையடுத்து பொலிஸ் தடியடி நடத்திக் கூட்டத்தினரைக் கலைத்தனர்.

## வெள்ளி விருந்து

# எல்லாம் அவரவர் தலைவிதி

இறைவன் ஒருவன் இருக்கின்றான். அந்த இறைவன் ஒருவனாலேயே இவ்வுலகம் ஆட்டிப்படைக்கப்படுகின்றது. புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்தவர்கள் உண்மையிலேயே பாக்கிய சாலிகள் மட்டுமன்றிப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்களும் கூட. இந்த இறைவனின் திருவருள் வசத்தினாலேயே இந்த உலகம் இயங்குகின்றது. எத்தனையோ சீவராசிகள் பிறந்து உழல்கின்றன. அவரவர் வினைக்கேற்ப பிறவியும் கிடைக்கின்றது. ஆனால் இறைவனின் அருளின்றி ஓரணுவும் அசையாது அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பதற்கிணங்க நாம் ஒவ்வொருவரும் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.


ஒரு கந்தோரில் வேலை செய்பவர்களில் பலரும் பல விதத்தில் மதிய உணவுகளை உட்கொள்கின்றனர். ஒருவர் காலையிலேயே செய்த உணவைப் பொட்டலமாகக் கட்டி எடுத்து வந்துள்ளார். இன்னொருவர் கடையில் சாப்பாட்டை வாங்கி உண்கின்றார். மற்றொருவர் எதுவுமே இல்லாமல் பச்சைத் தண்ணீரையே குடித்துவிட்டு இருக்கின்றார். ஒருவருக்கு அவரது வீட்டிலிருந்து மதிய உணவு சுடச்சுடவருகிறது அவர் தலைவாழையிலை போட்டு ருசித்து ரசித்துச் சாப்பிடுகின்றார்.

இவர்களில் ஒவ்வொருவரும் தாம் தாம் செய்தவினைகளுக்கேற்ப மதிய உணவு உண்கின்றார்கள். வீட்டிலிருந்து வந்த மதிய உணவை தலைவாழையிலை போட்டுச் சாப்பிடுபவரைப் பார்த்துப் பச்சைத் தண்ணீர் குடிப்பவர் பொறாமைப்படுவதால் பிரயோசனம் இல்லை. ஒரு கந்தோரில் இவ்வாறு நடப்பது போல்தான் உலகத்திலும் நடைபெறுகின்றது. அவரவர் தலைவிதிப்படியேதான் எல்லாம் நடக்கும். ஒரு சுவரிலே பந்தை விட்டெறிந்தால் அது திரும்பவும் எம்மிடமே வருவதுபோல் நாம் செய்ததை நாங்கள் தான் அனுபவிக்கவேண்டும்.

இறைவன் எல்லோருக்கும் அருள் செய்வான். ஆதலால் நாம் இறைபக்தியுடன் அவனை வணங்கி வாழ்த்தி வந்தால் எமக்கு நல்லது நடக்கும். இதுவரை நாளும் போனது போகட்டும்,இனிமேலாவது நாம் நன்மைகளையே நினைந்து நன்மைகளையே செய்து நன்மைகளையே செய்யுமாறுமற்றவர்களுக்கும் சொல்லி, வாழ்வில் மனிதப் பிறவிப் பயன் எடுத்ததன் பெருமையைப் பாதுகாத்து நற்கதியடைய நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

*சிவநெறிக் கலாநிதி*
*இராசையா ஸ்ரீதரன்*

# வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கு எவருக்கும் பணம் வழங்கவில்லை



(திருச்சி)

வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்காக காங்கிரஸ் கட்சியால் எவருக்கும் பணம் வழங்கப்படவில்லையென பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். இது தொடர்பாக நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கும் பணம் கொடுக்கவில்லை என நாடாளுமன்றத்தில் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற எம்.பி.க்களுக்கு லஞ்சம் அளித்ததாக எழுந்த புகார் குறித்து விசாரித்த நாடாளுமன்ற கமிட்டியின் அறிக்கையில், எம்.பி.க்களை விலைக்கு வாங்கியதற்கான போதுமான ஆதாரங்கள் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை முழுமையாக நான் நம்புகிறேன்.

2008ஆம் ஆண்டு நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, காங்கிரஸ் கட்சியில் இருந்தோ அல்லது மத்திய அரசில் இருந்தோ எந்தவித பணப் பரிவர்த்தனையிலும் யாரும் ஈடுபடவில்லை. டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கும் வொஷிங்டனில் உள்ள அமெரிக்க அரசுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் குறித்த உண்மைத் தன்மையை மத்திய அரசு உறுதி படுத்திக் கொள்ள சாத்தியம் இல்லை.

என்னுடைய பாராளுமன்ற வாழ்க்கையில் எதிர்கட்சிகளிடம் இருந்து இத்தகைய மூர்க்கத்தனமான தாக்குதலை நான் எதிர்கொள்ளுவது முதல் முறை அல்ல. நிதி மந்திரியாகவும் பிரதமராகவும் இது போன்று எதிர் கொண்டுள்ளேன்.

சரியாகச் சொல்வதாக இருந்தால் 2004ஆம் ஆண்டில் இருந்து இத்தகைய அணுகுமுறையை பிரதான எதிர்கட்சி கையாண்டு வருகிறது. பா.ஜனதாக் கட்சியின் முதுபெரும் தலைவராக இருப்பவர், பிரதமர் பதவி தன்னுடைய பிறப்புரிமை எனக் கருதுகிறார். எனவே, என்னை அவர் ஒரு போதும் மன்னிக்கத் தயாராக இல்லை.

சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடந்த தேர்தலின் மூலமாக எங்களுக்கு மக்கள் வாக்களித்து ஆட்சியில் அமர்த்தி உள்ளனர் என்பதை அத்வானிக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பிரதமராவதற்கு இன்னும் மூன்றரை ஆண்டுகள் காத்திருங்கள் என்றார்.




# தேர்தலில் விஜயகாந்தை எதிர்த்து நின்றால் தனக்குத்தான் கேவலம் என்கிறார் வடிவேல்



(சென்னை)

நடைபெறவுள்ள தமிழக சட்டசபைத் தேர்தலில் தே.தி.மு.க தலைவர் விஜயகாந்தை எதிர்த்து நின்றால் தனக்குத் தான் அவமானமென நடிகர் வடிவேலு தெரிவித்தார்.

தி.மு.கவின் பிரசார கூட்ட மொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கலைஞர் போட்ட திட்டங்களைக் கேட்டபோது, கண்ணைக் கட்டுது. எதிர் அணி மிரண்டு கிடக்கிறது. எல்லாம் பக்கமும் அணைகட்டி வைத்துவிட்டார் கலைஞர்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். கருவில் உள்ள குழந்தையும் பயன் அடைகிறது. நான் 25 வயதுக்கு மேல்தான் சம்பாதிக்க ஆரம்பித்தேன். ஆனால் கருவில் உள்ள குழந்தை மாதம் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறது.

நேற்று ஒருவர் கட்சியை ஆரம்பித்துவிட்டு, நாளைக்கு முதல் அமைச்சர் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார். என்னவென்றால் அவர் கல்யாண மண்டபத்தின் இடையில் இரண்டு தூண் வந்துவிட்டதாம்.

கல்யாண மண்டபத்தில் இரண்டு தூண் வந்ததற்கு, உடனே கட்சியை ஆரம்பித்து முதல் அமைச்சர் என்று சொல்லிக் கொள்கிறீர்களே, நீங்கள் முதல் அமைச்சர் என்றால், நான் பிரதமர். நீங்கள் பிரதமர் என்றால் நான் ஜனாதிபதி, நீங்கள் ஜனாதிபதி என்றால் நான் ஒபாமா.

ஒருத்தர் என்னிடம் கேட்டார். ஏங்க அவர (விஜயகாந்த்) எதிர்த்து நிற்க போறேன் என்று சொன்னீங்களே, நிற்கப் போறீங்களா என்றார். அவரை எதிர்த்து நின்றால் எனக்குத் தான் கேவலம். மொத்த ரீமையும் காலி செய்வதுதான் என் வேலை. முதல் அமைச்சர் என்று சொல்லிக்கொண்டு 41 சீட் வாங்கப் போனீங்களே. அங்க என்ன முதல் அமைச்சர் பதவி கொடுப்பார்களா. மிகப்பெரிய வீராப்பா பேசினீங்க.

அந்தக் கட்சி பெயர் கூட வாயில் வரமாட்டேங்குது. நாக்கு மூக்காவா, மூக்கு முக்காவா, தேக்கு மூக்கா ஏதோ சொல்றாங்க. முதல் அமைச்சர் என்று சொல்லிக்கொள்வதோடு அல்லாமல், 2 ரூபாய்க்கு ஒரு தொப்பியை வாங்கித் தலையில் மாட்டிக்கொண்டு, அதேபோல் கண்ணாடி, கர்சிப் வாங்கி மாட்டிக்கிட்டு போஸ் கொடுக்கிறார். கருப்பு எம்ஜிஆர் என்று சொல்லிக்கொள்கிறார். நீங்கள் கருப்பு எம்ஜிஆர் என்றால் நான் கருப்பு நேரு.

# 2வினாடியில் காயும் அழியாத மை மைசூரிலிருந்து வந்தது தமிழகம்

(திருச்சி)

வாக்காளர் கைவிரலில் வைத்த 2 வினாடியில் காய்ந்து விடும் அழியாத மை மைசூரில் இருந்து வந்துவிட்டது என்று தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் கூறியதாவது:-

இறந்த தலைவர்களின் சிலைகளைத்தான் மூடி வைக்கும்படி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. உயிருடன் இருக்கும் தலைவர்களின் சிலைகளை மூடத்தேவையில்லை.

இந்தத் தேர்தலில் வாக்குப்பதிவின்போது, வாக்காளர் கைவிரலில் வைக்கப்படும் அழியாத மை மைசூரில் இருந்து வந்து சேர்ந்துள்ளது. வாக்குப் போடுவதற்காக வாக்குச் சாவடியில் நுழையும்போது முதலில் இருக்கும் அதிகாரி, வாக்காளர் கைவிரலில் மை இடுவார்.

அடுத்து இருப்பவர் வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்து, வாக்காளரிடம் கையெழுத்து வாங்குவார். மூன்றாவதாக இருப்பவர், வாக்காளர் கையில் மை இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டு யூனிட்டை இயக்குவார்.

அதன்பின்னர்தான் வாக்குப் போட முடியும். இந்த நடைமுறைகள் முடிவதற்கு சில நிமிடங்கள் வரை ஆகும். ஆனால், கைவிரலில் இடப்படும் மை, இரண்டே வினாடிகளில் காய்ந்துவிடும். அதன்பிறகு அந்த மையை அழிக்கவே முடியாது.கட்சித் தலைவர்கள், நடிகர், நடிகைகள், பிரபலங்கள், முக்கியப் பிரமுகர் போன்றவர்கள் குறிப்பிட்ட கட்சி வேட்பாளருக்காக பிரசாரம் செய்வார்கள்.

தமிழகம் முழுவதும் தேர்தல் பணியில் சுமார் 3 லட்சம் பேர் ஈடுபடுத்தப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொலைகாரர்களுக்கு அனுமதியளிக்கும் நிறுவனமாக மாறியுள்ள ஐ.நா.சபை

## சப்ரகமுவ பல்கலை வேந்தர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச சக்திகளின் கைப்பொம்மையாகவும், கொலைகாரர்களுக்கு அனுமதி வழங்கும் நிறுவனமாகவும் தற்போது செயற்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை மீது எமக்கிருந்த நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது என தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத கூட்டமைப்பின் உறுப்பினரும் சப்ரகமுவ பல்கலைக் கழக வேந்தருமான கும்புறுகமுவே வஜிர தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

லிபியா மீது சர்வதேச நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இதனைக் கண்டிக்காமல் அமைதியாக வேடிக்கை பார்க்கின்றது.

உலக சமாதானம், அமைதி, நீதி, நேர்மை என்பதைக் காப்பற்றுவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபை தற்போது லிபியா மீது தாக்குதல் நடத்தி, கொலைகளைச் செய்வதற்கு மேற்கத்தைய நாடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கொலைக்காரர்களுக்கு அனுமதி வழங்கும் நிறுவனமாக தற்போது ஐக்கிய நாடுகள் சபை உள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மீது எமக்கிருந்த நம்பிக்கை தற்போது இல்லாமல் போய்விட்டது.

உலக சமாதானத்தைக் காப்பாற்ற வேண்டிய முக்கியமான நாடுகள் பல ஒன்றிணைந்து லிபியாவில் மனிதாபிமானமற்ற வகையில் தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன.



தமது சூழ்ச்சியாளர்களை குறித்த நாடுகளுக்கு அனுப்பி அங்கு உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்துவதே சர்வதேச சக்திகளின் நடவடிக்கையாகும்.

ஈராக்கிற்கும் இதனையே செய்தனர் என்பதை நாம் கடந்த காலத்தில் கண்டோம். சதாம் ஹுசைனை எந்தவொரு காரணமுமின்றிக் கொலைசெய்தனர்.

லிபிய அதிபர் கேர்ணல் கடாபி மேற்கு நாடுகளுக்கோ, சர்வதேச சக்திகளுக்கோ அடிபணிந்தவர் அல்லர்.

கடாபியை மண்டியிடச் செய்ய வேண்டும் என மேற்கு நாடுகள் பல தடவைகள் முயற்சி செய்தபோதிலும் அதனைச் செய்ய முடியாமல் தடுமாறியதை நாம் கண்டுள்ளோம்.

லிபியாவின் உள்விவகாரத்தில் ஏனைய நாடுகள் தலையிட வேண்டிய அவசியமில்லை என்றார்.

கடந்த 2009 ல் வன்னியில் இலங்கைப் படையினரால் பெருமளவான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்த சர்வமத கூட்டமைப்பு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவும் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை

## ஊடக தகவல் மத்திய நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது செயற்பட்டுவரும் தேசிய மற்றும் சர்வதேச அரச,அரச சார்பற்ற நிறுவனங்களை குற்றத் தடுப்புப் பிரிவினர் சோதனைக்குட்படுத்துவதாக வெளியான செய்தியை தேசிய பாதுகாப்பிற்கான ஊடக தகவல் மத்திய நிலையம் மறுத்துள்ளது.

இவ்வாறு சோதனைக்குட்படுத்துவதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என அந்த மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், சில நிறுவனங்கள் மீது எழுப்பப்பட்ட குற்றச்சாட்டை அடிப்படையாகக் கொண்டு, அவ்வாறான நிறுவனங்களை மாத்திரம் சோதனைக்குட்படுத்தியதாகவும் அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.


அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சர்வதேச நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் நிதியுதவிகளை எவ்வாறு அந்த நிறுவனங்கள் உபயோகிக்கின்றன என்பது தொடர்பாகத் தாம் அவதானத்துடன் இருப்பதாகத் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# மாங்குளத்தில் விளையாட்டு மைதானம் கட்டுமானப் பணிக்கு உதவும் போத்தம்

(கொழும்பு)

மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு வளாக கட்டுமானத் திட்டத்துக்கு உதவ பிரித்தானிய துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவர் இயன் போத்தம் முன்வந்துள்ளார்.

வடமாகாணத்தின் இதயப் பகுதியான மாங்குளத்துக்கு அருகே இந்த சமூக விளையாட்டு வளாகத்தை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் இலங்கை துடுப்பாட்ட அணியின் வீரர்கள் முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார, சமிந்த வாஸ் போன்றவர்கள் ஈடுபட்டுள்ளனர்.



இலங்கையைத் தளமாகக் கொண்ட அறக்கட்டளை நிறுவனம் ஒன்று சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் மாங்குளத்துக்கு அருகே சமூக விளையாட்டு வளாகத்தை அமைக்க முன்வந்துள்ளது.

இந்தவாரத் தொடக்கத்தில் அந்தப் பகுதிக்கு முத்தையா முரளிதரனுடன் சென்றிருந்த இயன் போத்தம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தத் திட்டத்தை அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.

# கதிர்வீச்சுப் பாதிப்புகள் குறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் சகல உணவுப் பொருட்களும் இறக்குமதி நுழைவாயில்களில் கதிர்வீச்சுச் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை ஜப்பானிலிருந்து அதிகளவு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில்லை. ஆனால் அதன் அண்டை நாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களும் துறைமுகத்தில் உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இவற்றின் மாதிரிகள் தேசிய அணு சக்தி அதிகார சபைக்கு மேலதிக சோதனைகளுக்காக அனுப்பப்படுகின்றன.

அணு சக்தி அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்பே உணவுப் பொருட்கள் வெளியில் அனுப்பப்படுகின்றன. சுகாதார அமைச்சின் உணவுப் பரிசோதகர்கள் இந்த நடைமுறையை அமுல் செய்து வருகின்றனர். இதுவரை கதிர் வீச்சுத் தாக்கம் கொண்ட எந்த உணவுப் பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஜப்பானில் இருந்து திரும்பி வருகின்றவர்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஒருவர் கதிர்வீச்சுத் தாக்கத்துக்கு ஆளானால் அவரால் மற்றவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எனவே தற்போதைய நிலைமைகள் குறித்து மக்கள் வீண் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது

# கட்டடம் பாதுகாப்பின்றி இருந்தமையே இலங்கைப் பெண்கள் மரணமடையக் காரணம்

## தீ கட்டுப்பாட்டுச்சபை அறிக்கை

(கொழும்பு)

கடந்த மாதம் 4 ஆம் திகதி லண்டன் லூசியம் கிறீனிச் அருகிலுள்ள டெப்பேட் என்னும்இடத்தில் உள்ள அடுக்கு மாடிக் கட்டடம் தீப் பிடித்ததில் தமிழ்ப் பெண்கள் இருவர் மரணமடைந்ததனர்.



இத் தீ விபத்தில் 59 அகவையுடைய முல்லைத்தீவைச் சேர்ந்த சந்திராபதி தர்மலிங்கம், 42 அகவையுடைய குணாளினி அழகரட்ணம் ஆகியோர் உயிரிழந்தனர். மெரீன்டவர் என்று அழைக்கப்படும் 16 அடுக்குகளைக் கொண்ட தொடர்மாடிக் குடியிருப்பிலேயே இவ்விருவரும் வசித்து வந்தனர். இத்தீ விபத்து தொடர்பாக தீ கட்டுப்பாட்டுப் பிரிவினர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

அதில், தீ பரவினால் அதைக் கட்டுப்படுத்தும் பாதுகாப்புக்கான விதிமுறைகள் எதுவும் அக் கட்டிடத்தில் இருக்கவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளதாக, லூசியம் நகரசபை தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட இந்த 16 மாடிக் கட்டிடத்திலுள்ள வீடுகளில் வாழும் மக்களின் பாதுகாப்பை அதிகரிக்க, உரிய பாதுகாப்பு நடைமுறைகளை லூசியம் நகர சபை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தீயணைப்புப் படையினர் பரிந்துரை செய்துள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது.

குறிப்பிட்ட கட்டடத்தில் பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிக் கடந்த பல மாதங்களாக ஆராயப்படவில்லை எனவும், அவசர வெளியேற்றத்திற்கான பாதைகள்,கதவுகள் முறையாகப் பராமரிக்கப்பட வில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக லூசியம் நகரசபைக்கு வழங்கப்பட்டிருந்த 21 நாட்கள் கால அவகாசம் முடிவடைந்திருப்பதால், நகரசபை தற்பொழுது கட்டிடத்தை திருத்த வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றது எனவும் அறியப்படுகிறது.

# போர்க்குற்ற விசாரணை அழுத்தம் நெருக்கடியில் அமெரிக்க முதலீடுகள்

(கொழும்பு)

அமெரிக்காவின் உரிமைகள் சட்டமும், போர்க்குற்ற விசாரணை அழுத்தங்களும் இலங்கையில் அமெரிக்க முதலீடுகளைக் கொண்டுவரும் முயற்சிகளைப் பெரிதும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளன.

இதனால் இலங்கை அரசாங்கம் அதிருப்தி அடைந்துள்ளது.

போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இலங்கையில் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளின் முதலீட்டை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பெரும்பாடு பட்டு வருகிறது.

இந்தநிலையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கொடுக்கப்படும் அழுத்தங்களாலும், அமெரிக்காவில் நடைமுறையில் உள்ள உரிமைகள் சட்டத்தினாலும் அமெரிக்க முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய நேற்றுமுன்தினம் வொஷிங்டனில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்குத் தூண்டும் வகையில், அமெரிக்காவைச் சேர்ந்த Boeing, Caterpillar, hotelier Starwood போன்ற மதிப்பு மிக்க நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகளை அழைத்துக் கொண்டு அவர் இந்த வாரம் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

உள்நாட்டுப் போர் 2009இல் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையில் பொருளாதாரம் வளர்ச்சி பெற்று வருகிறது.

மேலும் பெருமளவு அமெரிக்க முதலீடுகளை இலங்கை எதிர்பார்க்கிறது.

ஆனால் அனைத்துலக போர்க்குற்ற விசாரணை அழுத்தங்களால் இலங்கையில் முதலிடுவதற்கு அமெரிக்கா தயக்கம் காண்பிக்கக் கூடும்.

கடந்த ஆண்டு இலங்கைப் படைகளின் பயன்பாட்டில் உள்ள போக்குவரத்து உலங்கு வானூர்திகளுக்கான உதிரிப் பாகங்களைப் பெற முயற்சித்த போது, அவற்றை இலங்கைக்கு விநியோகிக்க அமெரிக்காவின் உரிமைகள் சட்டம் தடையாக இருந்தது.

இதன் காரணமாக அந்த உதிரிப்பாகங்களை வேறு நாடுகளிடம் இருந்தே வாங்கும் நிலை ஏற்பட்டது என்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய மேலும் கூறியுள்ளார்.

# நுரைச்சோலை அனல்மின் நிலைய அமைப்பு

# மின்உற்பத்தியில் 11 சதவீத அதிகரிப்பு

சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அனல்மின்நிலையம் கடந்த செவ்வாயன்று திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக நாட்டினது மின்சார உற்பத்தி 11 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாகவும் இது மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படுவதற்கும் வெளிநாட்டு நாணயமாற்று உறுதியாவதற்கும் வழிசெய்யும் என இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

இலங்கையின் தென்மேற்குக் கரையோரத்தில் நுரைச்சோலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த அனல்மின் நிலையமானது 300 மெகாவாற்ஸ் மின்சாரத்தினை உற்பத்திசெய்யும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த மின்-உற்பத்தி நிலையத்தினை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார்.

போர் முனைப்புடன் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அனல் மின்னிலையத்தினை அமைக்கும் திட்டத்தின் முதலாவது கட்டப் பணிகள் பூர்த்தியடைந்திருக்கிறது என இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். போருக்குப் பின்னான பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்காகவும் உட்கட்டுமான அபிவிருத்திக்காகவும் தனது அரசாங்கம் முன்னெடுக்கும் ஆறு பில்லியன் டொலர் பெறுமதியான திட்டங்களுக்கான சான்றாக இந்த அனல் மின்நிலையத் திறப்புவிழா அமைகிறது என ஜனாதிபதி ராஜபக்ஷ தொடர்ந்தார்.

"எங்களது நாட்டுக்கு முதலீட்டாளர்கள் வருவதைத் தடுக்கும் வகையில் போராட்டங்களை நடாத்தவேண்டும் எனச் சிலர் கருதினர். கடந்த காலத்தில் நாங்கள் இழந்துநின்ற பலவற்றை இன்று நாங்கள் பெற்றுவருகிறோம். அவற்றில் ஒன்றுதான் இந்த அனல் மின் நிலையம்" என நுரைச்சோலை அனல் மின் நிலையத்தினைத் திறந்துவைத்து உரைநிகழ்த்திய ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி நாட்களில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித



உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிடக் கூடாது என புலம்பெயர் நாடுகளில் செயற்பட்டுவரும் புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் மகிந்த ராஜபக்ஷவினது அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சல்பரின் அளவு குறைவாகக் காணப்படும் நிலக்கரியே இந்த அனல் மின் நிலையத்தில் பயன்படுத்தப்படும் எனவும், வெளிநாட்டு நாணய மாற்றாக அதிக பணம் செலவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் குறைந்த விலையுடைய நிலக்கரியே பெறப்படும் எனவும் மின்சக்தி மற்றும் எரிபொருள்துறை அமைச்சு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

இன்றைய நிலையில் தனக்குத் தேவையான மின்சாரத்தில் 60 சதவீதமானதை டீசலில் இயங்கும் பாரிய மின்பிறப்பாக்கிகளின் ஊடாகவே இலங்கை பெற்று வருகிறது. 2008ஆம் ஆண்டு எரிபொருள் விலை அதிகரித்தமைதான் நாட்டில் நிலவுகின்ற பணவீக்கத்திற்கு முழுமுதற் காரணம் என்றும் இலங்கையினது பொருளாதார வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஒரேயொரு காரணி மசகெண்ணெயின் விலையேற்றமே என்றும் மத்திய வங்கி கூறுகிறது.

இலங்கை, மின்சாரத்தினைப் பெறுவதற்கு டீசலில் இயங்கும் பாரிய மின்பிறப்பாக்கிகளில் அதிகம் தங்கியிருப்பதுதான் இலங்கையில் மின்கட்டணங்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கான பிரதான காரணம். வெளிநாட்டு முதலீட்டாளர் களின் இலங்கை மீதான நாட்டம் குறைவதற்கும் உள்ளூர் உற்பத்திகள் குறைவடைவதற்கும் இதுவே பிரதான காரணமாகும். இன்றைய நிலையில் எஞ்சிய 40 சதவீதமான மின்சாரம் நீர் மின் உற்பத்தி ஊடாகப் பெறப்படுகிறது.

அரசியல் ரீதியான காரணங்களுக்காக எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றுக்கு அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தினை மானியமாக வழங்குகிறது. நாட்டினது வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை அதிகரிப்பதற்கான முதன்மையான காரணங்களில் இதுவும் ஒன்று. மின்சாரம் மற்றும் எரிபொருளுக்காக ஒவ்வொரு ஆண்டும் 50பில்லியன் டொலர்களை அரசாங்கம் மானியமாக வழங்குகிறது.

இவ்வாறாக நாட்டினது வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பாரிய துண்டுவிழும் தொகையினைக் குறைப்பதற்கு அனைத்துலக நாணய நிதியம் வழங்கும் 2.6 பில்லியன் கடன் தொகைக்கான விதிமுறையாக அரசுக்குச் சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகியவற்றை உடைத்து அவற்றில் ஏற்படும் தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடன்பட்டிருக்கிறது.

21 மில்லியன் சனத்தொகையினைக் கொண்ட இலங்கையில் 87 சதவீத மானவர்கள் மின்சாரத்தினைப் பெறுகிறார்கள்.

செய்திவழிமூலம்:- றொய்ட்டர்

# நோய்கள் வராமல் தடுக்கவே தேசிய நுளம்பு வாரம் பிரகடனம்

## அமைச்சர் மைத்திரிபால



(கொழும்பு)

சகல நோய்களையும் வராமல் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவே தேசிய நுளம்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதிலும் குறிப்பாக டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதே முக்கிய நோக்கமெனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியை தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

இந்த நுளம்பு ஒழிப்புவாரமென்பது,சகல நோய்களும் வராமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். கடந்த வருடத்தின் முதல் மூன்று வருடகாலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்தவருடத்தின் அதே காலப் பகுதியில் டெங்கு நோய்த் தாக்கம் குறைவடைந்துள்ளது.

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற காலதாமதமாகச் செல்வதனாலேயே மரணங்கள் சம்பவிக்கின்றன. எனவே டெங்கு நோயாளர்கள் அரச வைத்திய சாலைகளில் சிகிச்சையைப் பெறவேண்டும். அங்கு நன்கு பயிற்றப்பட்ட மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், மாத்திரைகள் என்பன உள்ளன.

டெங்கைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஜனாதிபதி செயலணிக்குழு, படையினர், அமைச்சர்கள்,சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்த நுளம்பு ஒழிப்பு வாரத்தில் இன்று பாடசாலைகள் அனைத்தும் துப்புரவு செய்யப்படும். நாளை அனைத்து வீடுகளும் பரிசோதிக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். நாளை மறுதினம் பொது இடங்கள்,மயானங்கள என்பன துப்புரவு செய்யப்படும் எதிர்வரும் 28ஆம் திகதி வெறுமையான காணிகள்,ரயில்பாதைகள்,வீட்டு உரிமையாளர் இல்லாத இடங்கள் என்பன பரிசோதித்து துப்பரவு செய்யப்படும் எதிர்வரும் 29ஆம் திகதி சகல மதவழிபாட்டுத் தலங்கள், முன்பள்ளிகள் என்பன பரிசோதிக்கப்படவுள்ளன.

# வெப்பநிலை அதிகரிக்கும்

(கொழும்பு)

அடுத்தமாதம் ஐந்தாம் திகதியிலிருந்து 15ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இலங்கையில் வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படுமென வானிலை அவதான நிலையப் பணிப்பாளர் டி.ஏ ஜயசிங்க தெரிவித்தார்.

சூரியன் பூமிக்கு மிக நெருக்கமாக இந்தக் காலப் பகுதியில் வருவதன் காரணமாக இந்த வெப்பநிலை அதிகரிப்பு ஏற்படுமெனவும்,மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் சூரியன் தெற்குத் திசையிலிருந்து வடக்குத் திசை நோக்கி நகருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனால் கூடிய வெப்பநிலை நிலவுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் அபிவிருத்தியை துரிதப்படுத்த புதிய வேலைத்திட்டம் ஆரம்பமானது

(கொழும்பு)

வடமாகாண மக்களது வாழ்வை மீள்கட்டியெழுப்பச் செய்யும் நோக்குடன் அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் ஐக்கிய நாடுகள், அரசசார் பற்ற நிறுவனங்களுடன் இணைந்து "2011ஆம் ஆண்டின் வடமாகாணத்திற்கான கூட்டு உதவித்திட்டம்" எனும் ஒரு வருடகாலத் திட்டம் கடந்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.


இத்திட்டமானது மக்களது அவசரகால தேவைகளை குறுங்காலத்தில் மற்றும் நடுத்தரகாலங்களில் விரைவாக நிறைவு செய்யக்கூடிய வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் வதிவிட நிர்மாணம், விவசாய ஊக்குவிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மீட்டுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், சுகாதாரம் மற்றும் போசாக்கு அபிவிருத்தி, மீள்குடியமர்வுக்கு உதவக்கூடிய வகையில் மிதிவெடி அகற்றல்,கல்வி முன்னேற்றம்,குடிநீர் மற்றும் சூரிய வெளிச்சத்திட்டம்,உறுதியான பொதுமக்கள் நிர்வாகத்திட்டம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.



தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெமட்டகொட சீவாலி மகாவித்தியாலயத்தில் விழிப்புணர்வு ஸ்ரிக்கரை ஒட்டுவதனைக் காணலாம்.

# பனை வளத்தின் உச்ச பயனைப் பெற புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பேச்சு



(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கை அன்னையின் அருங்கொடை கற்பகதரு. இக்கற்பகதருவால் அளிக்கப்படும் பயனை முழுமையாக பயன்படுத்துமிடத்து ஒருவருட வருமானமாக 500 கோடி ரூபா பெறமுடியும்.

இப்பயனை அடைவதற்கான தொழில்நுட்பங்கள் பனை அபிவிருத்திச் சபையினால் கண்டறியப்பட்டு வருகின்றது. இவ்வளத்தினூடான பயன்பாட்டைப் பெற அனைவரும் முன்வரவேண்டும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஐ.எல்.ஓ நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட பனம் பாணி உற்பத்தி பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

1978 ஆம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கும் போது பனை வளத்தின் அபிவிருத்தியும் அதனை நம்பியுள்ள மக்களின் அபிவிருத்தியும் நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆகையால்தான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுவிலிருந்து 3 உறுப்பினர்களை பனை அபிவிருத்திச் சபையின் நெறியாளர் குழுவிற்கு நியமித்துள்ளோம்.

இரு நிறுவனங்களின் இணைந்த செயற்பாடுகளில் ஒன்றாக இப்பயிற்சிக்கான போதனாசிரியர் வழிகாட்டல், ஆலோசனைகள் என்பன வழங்கியுள்ளோம்.

இப்பயிற்சியினூடாக இணைந்துள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு சபையால் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். இந்நிலையில் உற்பத்திப் பயிற்சிக்காக 20 பெண்கள் இணைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தின் மாறம்பைக்குளம் எனும் கிராமத்திலுள்ள பனம் பாணிப் பயிற்சி ஆர்வலர்களின் கோரிக்கைக்கிணங்க பயிற்சி ஆர்வலர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், அப்பெண்களின் கோரிக்கைக்கு இணங்க பனம் பாணி பயிற்சி நிலையம் ஒன்றினை அக்கிராமத்தில் அமைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், இந்நிலையத்திற்கான ஓலை வாரும் கருவிகள், சத்தகங்கள், குருத்தோலைகள் என்பனவும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# வன்னியில் வாழ்வாதார உதவித்திட்டம் கிளிநொச்சியில் நாளை ஆரம்பம்

(கிளிநொச்சி)

பொருளாதார அமைச்சு வடக்கு மாகாண சபை, யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் ஊடாக வாழ்வாதாரத் திட்ட உதவியாக படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கும் நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி அறிவித்துள்ளார்.

வாழ்வாதார உதவியாக படகு இயந்திரம் பெறும் பயனாளிக்கு அவரது குடும்பத்தில் குடும்பத் தலைவிக்கு கடற்தொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னரே ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (70)

# போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

(நெல்லியடி)

இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு நாளை மாங்குளம் மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக கொழும்பு றோயல் கல்லூரி அதிபர், இளைப்பாறிய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், நுண்ணறிவு எழுத்தாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கிற்கான பதிவுகளை முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர் சங்க செயலாளர் சக்தியுடன் 0772090710 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# குற்றவியல் சட்டத்தில் விரைவில் திருத்தம்

(கொழும்பு)

இலங்கை குற்றவியல் மற்றும் தண்டனைச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வழக்கு விசாரணைகள் காலதாமதமடைவதைத் தவிர்ப்பதற்காக குற்றவியல் சட்டத்திலும் சிறைச்சாலைகளில் காணப்படும் இடப்பற்றாக் குறையை இல்லாமல் செய்வதற்கு தண்டனைச் சட்டத்திலும் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன. மேலும் தகுதியற்ற தண்டனைகளைக் குறைக்கவும் சில திருத்தங்களைக் கொண்டுவரவும் நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்காக நீதி அமைச்சரிடம் கேட்டிருந்த போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

### புதிய தேர்தல்....

திசாநாயக்க நேற்றுடன் தனது பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரது ஓய்வின் மூலம் வெற்றிடமாகும் தேர்தல் ஆணையாளர் பதவிக்கு இன்று தொடக்கம் புதிய தேர்தல் ஆணையாளராக இதுவரை உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிய மகிந்த் தேசப்பிரிய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தச்சட்டம் மூலம் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முன் சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவுக்கே அதற்கான அதிகாரம் இருந்தது.

சுதந்திர தேர்தல் ஆணைக்குழுக்கள் செயலற்றுப் போயிருந்த காரணத்தால் தேர்தல் ஆணையாளர் தனது பொறுப்பிலிருந்து ஓய்வுபெற ஆறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இல்லாவிடில் கடந்த 2005 ஆம் ஆண்டே அவர் ஓய்வுபெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### இன்றைய மிகப்பெரிய...

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏனைய நாடுகளில் போர்க்குற்றங்களைத் தேடும் ஐ.நா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இன்று லிபியாவில் பாரிய போர்க் குற்றங்களை வெளிப்படையாக செய்து வருகின்றன.

படைகளைப் பயன்படுத்தி தாக்குதல் மேற்கொண்டு ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு இது ஒன்றும் 19ஆம் நூற்றாண்டல்ல. லிபியா மீதான தாக்குலை இலங்கை வன்மையாக கண்டிக்கிறது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

லிபியாவில் நடைபெற்ற போராட்டங்கள் உள்நாட்டு விடயமாகும். உள்நாட்டின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள லிபியாவின் அரசாங்கத்திற்கும் அந்நாட்டு மக்களுக்குமே உரிமையுண்டு.

எந்த ஒரு நாட்டினதும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு இறையாண்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதற்கு எந்தவொரு அரசிற்கோ, அமைப்பிற்கோ உரிமை கிடையாது. ஐ.நா பாதுகாப்புச்சபையின் அனுமதியுடன் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பலவந்தமாக தலையிட்டு விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

ஈராக்கிற்கு நடந்த நிலையே இன்று லிபியாவிற்கும் நடைபெறுகிறது. லிபியாவின் எண்ணெய் வளத்தை குறிவைத்து மேற்குலக நாடுகள் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

### சூற்றுச்சூழல்....

கிடைக்கக் கூடுமென ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

வனவிலங்கு திணைக்களம் உலக வங்கியுடன் இணைந்து மிலேனிய அபிவிருத்தி இலக்கு 7ஐ தீர்மானித்தது. இதனை அமுல்படுத்துவதற்கான சகல ஆயத்தங்களும் முடிவடையும் நிலையில் அரசாங்கம் திட்ட வரைவில் மாற்றங்களை கோரியதுடன், புதுவிடயங்களை சேர்க்க வேண்டுமெனவும் கோரியது.

அரசாங்கத்தின் கோரிக்கை இந்த திட்டத்தினூடாக உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதாக இருந்தமையால் அரசாங்கத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை கைவிடுவதே மிகச் சிறந்த தீர்வென உலக வங்கி கருதுகின்றது.

### ஊடகத்துறை...

நீங்கள் இத்தகைய வலைத்தளங்களில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது என தெரிவித்த தூதுவர் கில்டிகுருடி சோல்ட், மாணவர்களிடம் ஊடகத்துறையில் ஏற்பட்ட ஈடுபாடு, எதிர்கால வேலைவாய்ப்பு சம்பந்தமாகவும் கேட்டறிந்தார்.

### இந்திய...

நவீன தொழில்நுட்ப உதவியுடன் மீன்வளத்தை அப்படியே சூறையாடிக் கொள்கின்றனர். அதன் காரணமாக இலங்கை மீனவர்கள் சொற்பமாகவே மீன் பிடிக்க முடிகின்றது.

அத்துடன் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்களை மேற்கொள்வதாகக் கூறப்படுவது அப்பட்டமான பொய்.

அதனை கச்சதீவு திருவிழாவுக்கு வருகை தந்திருந்த இந்திய மீனவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். இதன் காரணமாகவே அவர்கள் கடற்படை குறித்து பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பகிடிவதையில் மாணவர்கள்; தடுத்து நிறுத்த கடும் நடவடிக்கை

(கொழும்பு)



பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவர் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள உயர் கல்வி அமைச்சு கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்காலங்களில் பல்கலைக் கழகங்களில் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக மாணவர் சங்கங்களை தடை செய்யும் நிலைமை ஏற்படலாம் என்று தெரிவித்தார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வகுப்புக்கள் தடை செய்யப்பட்ட மாணவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்கும் வரையில் பல்கலைக்கழகம் திறக்கப்படமாட்டாதென்றும், பல்கலைக் கழகங்களில் ஏற்படும் குழப்பங்களின் பின்னணியில் ஜே.வி.பி.யின் மாணவர் சங்கங்களே உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


### இந்தியாவில்....

ஒன்றை தமிழகத்தில் உருவாக்கிக் கொள்வார்கள்.

இதற்காக தமிழகத்திலுள்ள உள்ளூர் முக்கிய புள்ளிகள் இந்த விசேட வலையமைப்பில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இந்த விசேட புலனாய்வுக் கட்டமைப்பு தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் குடும்ப விபரங்களைத் திரட்டி அவர்களது புலம்பெயர் உறவுகளுடனான தொடர்புகள் அனைத்தையும் கண்காணிப்பதையே தனது பிரதான பணியாகக் கொண்டிருக்கும்.

எனினும் இதற்கும் மேலதிகமாக தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் ஆதரவாளர்களது நடவடிக்கைகளையும் இந்த விசேட புலனாய்வுக் கட்டமைப்பு விசேட கவனம் எடுத்து கண்காணிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி உத்தேச கண்காணிப்புச் செயற்திட்டம் குறித்து இலங்கை மற்றும் இந்திய அரசுகள் ஏற்கனவே இணக்கம் கண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துங்கள் எல்லாவெல மேத்தானந்த தேரர் நாடாளுமன்றில் சீற்றம்



(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்த தலைவனை யுத்த குற்றவாளியாக சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முயற்சித்த அமெரிக்கா, பிரித்தானியாவை லிபியா விடயத்தில் யுத்த குற்ற நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்று எல்லாவல மேத்தானந்த தேரர் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், லிபியாவின் ஜனாதிபதி கடாபி யார்? அவர் 20, 30 இன்றேல் 60 வருடங்கள் ஆட்சிபீடத்தில் இருக்கின்றாரா என்பது எமக்கு பிரச்சினை இல்லை. அவர் மக்களின் ஆணையில் தெரிவானவர். கூட்டுப்படையின் நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு நேட்டோவில் 28 நாடுகளின் அனுமதியைப் பெறவேண்டும் எனினும் சட்டவிரோதமான இந்த தாக்குதலுக்கு 22 நாடுகளே அனுமதியளித்துள்ளன.

கடாபியை பலியெடுப்பதற்கு பிரித்தானிய பிரதமருக்கு அனுமதி கொடுத்தது யார்? அவருக்கு இருக்கின்ற அதிகாரம் என்ன? கூட்டுப்படை நடவடிக்கை எடுக்க வேண்டும். லிபிய விடயத்தில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்தே தலைமை வகித்தன. இலங்கை விடயத்திலும் இவ்விரு நாடுகளே தலைமை வகித்தன.

இந்த தாக்குதல்களினால் லிபிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அவர்களை யுத்த குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவை யுத்த நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தலைமை தாங்கிய தலைவனை யுத்த குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அமெரிக்காவும் பிரித்தானியாவுமே முயற்சித்தது என்றார்.

# கட்டுநாயக்காவில் தங்கக்கட்டிகள் திருட்டு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து செட்டியார் தெரு வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான பதினைந்தரை கிலோ தங்கம் நேற்று திருடப்பட்டுள்ளது.

வெளிநாடொன்றிலிருந்து வர்த்தக நோக்கங்களுக்காக செட்டியார் தெரு வர்த்தகர் கொண்டு வந்த தங்கக் கட்டிகளே அவ்வாறு விமானத்தில் வைத்துத் திருடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வர்த்தகர் கொண்டுவந்த தங்கக்கட்டிகள் அவர் பயணித்த விமானத்தின் சரக்குப் பகுதியில் வைத்து எடுத்து வரப்பட்டிருந்தது. அவர் விமான நிலையத்தில் இறங்கி தங்கத்தைப் பொறுப்பெடுப்பதற்காக முயன்ற போது அது காணாமல் போயிருப்பது தெரிய வந்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இதுவரை காலமும் நடைபெற்றுள்ள திருட்டுகளில் இதுவே மிகப் பெரும் திருட்டுச் சம்பவமாகும். தங்கம் திருட்டுப் போயுள்ளமை தொடர்பாக விமான நிலையப் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


## Visa Processing & Advise

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விசா சம்பந்தமான செயற்பாடுகளும் சட்ட ஆலோசனைகளும் (Visa processing & Advise) எமது அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் ஊடாக பூர்த்தி செய்து தரப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு**

Avon International (Pvt) Ltd
138, Kanagaratnam Road
Ariyalai, Jaffna, 40000
srilanka
Tel:- 0215676676
021 5679679
Hotline:- 0759115111
E.mail - avon lk @ rocket mail .com (C/625)



## டோகா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| இல | வெற்றிடம் | எண்ணிக்கை | முன்னனுபவம் | ஊதியம் டோகா கட்டார் | ஊதியம் இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1) | இலகு ரக வாகன ஓட்டுனர் | 05 | Gcc Experien and Licennce | 1200 | 37,200/=+OT |
| 2) | Auto Mobile Mechanic & Auto Mobile Electrican | 02 | Experiencer in Froeign Vehicles | 1200 | 37,200/=+OT |
| 3) | கட்டட மின்னிணைப்பாளர் | 05 | ——— | 1000 | 31,000/=+OT |
| 4) | உதவியாளர் | 20 | ——— | 900 | 27,900/=+OT |

மேற்குறிப்பிட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்குப் பணியாளர்கள் உடனடியாக வேண்டப்படுகின்றார்கள்.
நேர்முகப்பரீட்சை 25.03.2011 லிருந்து அனைவரினதும் வேண்டுகோளிற்கு இணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
நேரம்:- காலை 10.00 am - 4.30 p.m வரை நடைபெறும்.
தங்குமிடம், வைத்திய, போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவுக்கொடுப்பனவு நிறுவனத்தினால் வழங்கப்படும். மேலதிகநேரம் வேலை செய்பவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.
வேலை நேரம் 8 மணித்தியாலங்கள். வாரத்தில் 6 நாட்கள். ஏனையவை டோகா கட்டார் ஊழியர் சட்டத்திற்கு அமைவாக நடைபெறும்.

Avon International (PVT) Ltd
# 138, Kanakaratnam Road
Ariyalai,Jaffna 40000 - Srilanka
முன்பதிவுகளுக்கு: T.P- 0215676676, 0215679679 Hotline - 0759115111
E.mail - avon lk @ rocket mail .com (C/628)


# கடலோர நிலப்பரப்பு விஸ்தரிப்பு; காலி முகத்திடல் முதல் வெள்ளவத்தைவரை

## புதிய செயற்திட்டம் விரைவில் அமுல்

(கொழும்பு)

காலிமுகத்திடல் தொடக்கம் வெள்ளவத்தை வரையான கடலோர நிலப்பரப்பு கடல் நீரை நிலப்பரப்புக்குள் உள்வாங்கும் விதத்தில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் ஐநூறு மீற்றர் வரையான அந்தக் கடற்பரப்பை விஸ்தரிப்பு தொடர்பான ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைய அது தொடர்பிலான ஆய்வுகளை துறைமுக அதிகார சபை மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு என்பன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் பிரதேச விஸ்தரிப்புத் தொடர்பான தகவல்கள் மற்றும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் ஆய்வு அறிக்கையினை துறைமுக அபிவிருத்தி பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்துள்ளார்.

இந்தத்திட்டத்திற்கு சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# திறந்த போட்டிப்பரீட்சை

(யாழ். நிருபர்)

இலங்கைப்பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்படும் இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு iiiற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையும் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் வகுப்பு ii ஐச் சேர்ந்த பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு ii ஐச் சேர்ந்த பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிக்கு அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.(10)

# தேசிய அமைப்பாளர் பதவி யாருக்கு? ஐ.தே.கட்சியில் தொடரும் குத்துவெட்டு




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியைத் தனக்குப் பெற்றுத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி நியமனம் எதிர்வரும் 28ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில், தேசிய அமைப்பாளர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவிற்கு வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்துள்ளார். எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான ரவி கருணாநாயக்க தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்க மறுத்துள்ளார். கட்சியின் யாப்பை மறுசீரமைத்து சஜித் பிரேமதாஸவிற்கு பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டதைப் போன்று, ரவி கருணாநாயக்க விற்கும் உயர் பதவியொன்றை வழங்குவது குறித்து ஆராயப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# லிபியா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது



லிபிய விமானமொன்றறை பிரெஞ்சு போர் விமானமொன்று நேற்று சுட்டுவீழ்த்தியுள்ளது.

விமானப் பறப்புதடை வலயத்தை மீறி பறந்த லிபிய விமானமொன்று அழிக்கப்பட்டதாக பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். லிபியாவில் விமான பறப்புத்தடை வலயத்தை அமுல்படுத்துவதற்காக கடந்த சனிக்கிழமை கூட்டுப்படைகளின் தாக்குதல்கள் ஆரம்பித்தபின் லிபிய விமானமொன்று கூட்டுப்படைகளினால் சுட்டுவீழ்த்தப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும். லிபியாவின் மேற்கு நகரான மிஸ்ரடாவுக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

# சுயாதீன தேர்தல் ஆணையாளரை நியமிக்க ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை

(கொழும்பு)



சுயாதீன தேர்தல் ஆணைக்குழு மற்றும் சுயாதீன தேர்தல் ஆணையாளரை நியமித்துக் கொள்வதற்கு என எதிர்காலத்தில் போராட்டங்களை நடத்த ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளதாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "கடந்த டிசம்பர் 8ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணையகம் மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு என்பவற்றின் அதிகாரங்களை 18ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பறித்துக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு அதிகாரங்கள் பறிக்கப்பட்டதன் பின்னரே முதல் முறையாக கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றதாக மங்கள சமரவீர நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் சுட்டிக்காட்டினார்.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கற்றலுக்கான சில குறிப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| மகே நம சகானா | - எனது பெயர் சகானா | தென்ன | - | தாருங்கள் |
| அர்ஜன் சுது பாட்ட | - அர்ஜன் வெள்ளை நிறம் | எவன்ன | - | அனுப்புங்கள் |
| தும்பீம தகனம் | - புகைத்தல் விலக்கப்பட்டுள்ளது. | வக்கறன்ன | - | ஊற்றுங்கள் |
| மகே வயச அவுருது தகயய் | - எனது வயது பத்து வருடம் | சோதன்ன | - | கழுவுங்கள் |
| ஒலுமல் லஸ்ஸனய் | - தாமரை மலர் அழகானது | பொண்ட | - | குடியுங்கள் |
| மம கனவா | - நான் சாப்பிடுகிறேன் | அறினவா | - | திறத்தல் |
| அம்மா பத் உயனவா | - அம்மா சோறு சமைக்கிறாள் | அண்டனவா | - | அழுதல் |
| அப்பி இகென கன்னவா | - நாங்கள் படிக்கிறோம் | அதினவா | - | இழுத்தல் |
| தாத்தா யனவா | - அப்பா போகிறார் | வகினவா | - | மூடுதல் |
| எயா கிய வனவா | - அவர் வாசிக்கிறார் | அலவனவா | - | ஒட்டுதல் |
| ஏ மினிஹா உசய் | - அந்த மனிதன் உயரமானவன் | அல்லனவா | - | பிடித்தல் |
| கபுட்டா களு பாட்டய் | - காகம் கறுப்பு நிறம் | அஸனவா | - | கேட்டல் |
| சத்தியே தவஸ் கத்த | - வாரத்தில் ஏழு நாட்கள் | இகெனகன்னவா | - | படித்தல் |
| சிங்கள பாஷா உகனிமு | - சிங்கள மொழி கற்போம் | இவசனவா | - | பொறுத்தல் |
| விதுகல்பதி எனவா | - அதிபர் வருகிறார் | உக்குலனவா | - | பிடுங்குதல் |
| குருத்துமி இனா வெனவா | - ஆசிரியை சிரிக்கிறார் | கன்னவா | - | எடுத்தல் |
| மம கொந்த லமயெக் | - நான் நல்ல பிள்ளை | கணினவா | - | எண்ணுதல் |
| மகே கம சுன்னாகம் | - எனது ஊர் சுன்னாகம் | நகினவா | - | ஏறுதல் |
| ஒபட்ட பொகொம ஸ்த்துதி | - உங்களுக்கு மிகவும் நன்றி | பஹினவா | - | இறங்குதல் |
| அம்மே மட்ட கிரிதென்ன | - அம்மா எனக்கு பால் தாருங்கள் | கொத்தனவா | - | பின்னுதல் |
| நங்கீட் அசனீப்பய் | - தங்கைக்கு சுகமில்லை | கியனவா | - | சொல்லுதல் |
| பனின்ட்ட பெற சித்தா பலனு | - பாயமுன் சிந்தித்துப்பார் | கியவனவா | - | வாசித்தல் |
| தன் வெலாவ கீயத | - இப்பொழுது எத்தனை மணி? | கொட்டனவா | - | இடித்தல் |
| இதிறியட்ட என்ன | - முன்னே வாருங்கள் | நவனவா | - | மடித்தல் |
| ஒகு பிளித்துறு லிவ்வா | - அவன் பதில் எழுதினான் | அஹன்ன | - | கேளுங்கள் |
| மம கத்தா நொக்கலமி | - நான் பேசவில்லை | பலன்ன | - | பாருங்கள் |
| எய லங்க தியெனவா | - அது அருகே இருக்கிறது | கியன்ன | - | கூறுங்கள் |
| மம அத்த சோதனவா | - நான் கைகளைக் கழுவுகின்றேன் | என்னட்ட | - | வருவதற்கு |
| இர பஹினவா | - சூரியன் மறைகிறது | யன்னட்ட | - | போவதற்கு |
| ஈயே அப்பட்ட நிவாடு | - நேற்று எங்களுக்கு விடுமுறை | சிதுவெனவா | - | ஏற்படுகின்றது |
| ஒகு கும்புர ஹானவா | - அவன் வயல்ல உழுகிறான் | நமதினவா | - | வணங்குதல் |
| பொறு கியன்ர எப்பா | - பொய் சொல்ல வேண்டாம் | அண்டலனவா | - | கூவுதல் |
| மகே அக்குறு புஞ்சி | - எனது எழுத்துக்கள் சிறியன | அதினவா | - | இழுத்தல் |
| குருவரயா பொத்தெக் துன்னா | - ஆசிரியர் புத்தகம் ஒன்றைக் கொடுத்தார் | அத்து கானவா | - | கூட்டுதல் |
| லிபினய லியன்ன | - முகவ்ரி எழுதுங்கள் | அசுறனவா | - | அடுக்குதல் |
| மகே தாத்தா றியதுறு | - எனது அப்பா சாரதி | உட கன்னவா | - | தூக்குதல் |
| உணு வத்துறு தென்ன | - சுடுநீர் தாருங்கள் | ககனவா | - | சொறிதல் |
| தொஸ்த்தற மகத்மயா ஹொந்தய் | - டாக்டர் ஐயா நல்லவர் | நவத்தினு | - | நிறுத்து |
| லங்கா மகே மவ்றட்ட | - இலங்கை எனது தாய் நாடு | துக்வெனவா | - | துக்கப்படுதல் |
| காமறய லஸ்ஸனட்ட திபுணா | - அறை அழகாய் இருந்தது | எக்கத்து கீரீம | - | கூட்டுதல் |
| கொந்தின் பிளிகத்தா | - நன்றாக வரவேற்றனர். | அடுகறனவா | - | கழித்தல் |
| கருணாகர சமாவென்ன | - தயவு செய்து மன்னிக்கவும் | வடிகறனவா | - | பெருக்குதல் |
| அப்பி செல்லம் கறன்ன யமுத? | - நாங்கள் விளையாடப் போவோமா? | பெதனவா | - | பிரித்தல் |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II

விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 06



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 01. | (iii) | 21. | ஆறும் |
| 02. | (iii) | 22. | ஓடுதல் |
| 03. | சித்திரை | 23. | விருத்தி |
| 04. | குயில் | 24. | பாடுதல் |
| 05. | கயிறு | 25. | (ii) |
| 06. | நிகழ்காலம் | 26. | (i) |
| 07. | மயில் | 27. | 1 |
| 08. | 3 | 28. | (i) |
| 09. | (ii) | 29. | (iii) |
| 10. | (iv) | 30. | (iii) |
| 11. | சமைத்தல் | 31. | (ii) |
| 12. | பறவை | 32. | (i) |
| 13. | மரம் | 33. | (ii) |
| 14. | (ii) | 34. | (iii) |
| 15. | (iii) | 35. | (i) |
| 16. | (ii) | 36. | 24 |
| 17. | காலை வேளையில் | 37. | 36 |
| 18. | பிறந்தநாள் நினைவூட்டலின்போது | 38. | 12 |
| 19. | நேர்முகப் பரீட்சையின்போது | 39. | 08 |
| 20. | புதுவருடப் பிறப்பின்போது | 40. | 04 |

## பகுதி -II

**01.** 1. 2வரு 9 மாதம் 21 நாட்கள்

2. வீதிகள் திருத்தப்பட்டு அகலமாக்கப்பட்டிருந்தது/சகல வீதிகளும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ருந்தன/அழகான பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது/கடைகள் திருத்தப்பட்டு பல மாடிக் கட்டடங்களாக மாறியிருந்தன.

3. சித்திரை (ஏப்ரல்) 4. 04

5. தெரு/பாதை/சாலை

6. இன்று

7. தை

8. இறந்தகாலம்

9. 2008

10. பொருத்தமான விடைக்கு புள்ளியிடுக.

11. 02

12. 1948.02.04.

13. உடுக்கு

14. தோல் 15. i) வருடம் ii). ஆச்சரியம்

**02.** 1. இரவு வணக்கம்

2. பிறந்தநாள் வாழ்த்துக்கள்

3. தயவுசெயது அமைதியாக இருக்கவும்

4. என்னை மன்னியுங்கள்

5. கைகளை கீழே விடுங்கள்

**03.** 1. நன்றி 2. எழும்புங்கள் 3. தாருங்கள் 4. கிண்ணம் 5. எனது

**04.** 1. கத்தரி 2. பலா 3. இஞ்சி 4. புளித்தோடை 5. அகத்தி

**05.** 1. ஆந்தை 2. எலி 3. தவளை 4. வாத்து 5. அணில்

**06.** 1. 2 2. 3 3. 3 4. 3 5. 1 6. 2 7. 2 8. 1 9. 3 10. 2

**07.** 1. 41 2. B 3. 87.50 4. 309.00 5. 2.70 6. 10 l 7. கிழக்கு 8. 1. 90 cm 2. 4 3. 120 cm

**08.** 1. 3 2. 2 3. 2

**09.** 1. சுவையான 2. களவாக 3. ஒட்டுப்பார்த்தல்


10. படத்திற்குப் பொருத்தமாகவும், திருத்தமாகவும் எழுதப்பட்ட வசனங்களுக்குப் புள்ளியிடுக.

## புள்ளியிடல்


| | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் I | 40 X 2.5 = 100 | | புள்ளி |
| வினாத்தாள் II | | | |
| வினா 01 | 16 X 1 | = 16 | புள்ளி |
| வினா 02 | 5 X2 | = 10 | புள்ளி |
| வினா 03 | 5 X2 | = 10 | புள்ளி |
| வினா 04 | 5 X2 | = 10 | புள்ளி |
| வினா 05 | 5 X2 | = 10 | புள்ளி |
| வினா 06 | 10X 1 | = 10 | புள்ளி |
| வினா 07 | 8 X 2 | = 16 | புள்ளி |
| வினா 08 | 3X1 | = 03 | புள்ளி |
| வினா 09 | 3 X 1 | = 03 | புள்ளி |
| வினா 10 | 6X2 | = 12 | புள்ளி |
| மொத்தப்புள்ளி | | = 100 | புள்ளி |

# கற்றலுக்கான சில குறிப்புகள்


தரப்பட்ட படங்களுள் ஒன்று மாத்திரம் ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




1) 2) 3) 4) (..........................)




1) 2) 3) 4) (..........................)



1) 2) 3) 4) (..........................)



1) 2) 3) 4) (..........................)



1) 2) 3) 4) (..........................)






கற்றலுக்கான சில குறிப்புகள்


## பின்வரும் பெரியார்களின் பெயர்களை எழுதுங்கள்

(பாரதியார், சித்திலெப்பை, மகாத்மாகாந்தி, சேர்.பொன்.இராமநாதன், விவேகானந்தர், டி.பி.விஜயதுங்க)



[------------------------] [------------------------] [------------------------] [------------------------]

## பின்வரும் இடங்களின் பெயர்களைத் தெரிவு செய்து எழுதுக.



[------------------------] [------------------------] [------------------------] [------------------------]

சந்திரவட்டக்கல், சிகிரியா ஓவியம், மோனாலிசா, இசுறுமுனி, தலதாமாளிகை

## பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

01. பின்வரும் தாவரங்களில் விதை மூலம் மட்டுமே விளைவது எது?
    1. கொத்தமல்லி 2. அலரி 3. பூவரசு 4. நொச்சி

02. இலங்கையில் இரு மதத்தவர்கள் கொண்டாடும் ஒரு தினம்?
    1. நத்தார் 2. எசலபெரஹரா 3. ரம்ழான் 4. சித்திரை வருடப்பிறப்பு

03. புராதன வரலாற்று எச்சங்களை ஆராய்ந்தும், பாதுகாத்தும் வருகின்ற திணைக்களம்?
    1. சுற்றுலாக் கைத்தொழில்
    2. தொல்பொருளியல்
    3. கல்வித் திணைக்களம்
    4. சுகாதாரத் திணைக்களம்

04. பின்வரும் உணவு வகைகளில் போசனை கூடியது
    1. பால் 2. சர்க்கரை 3. மீன் 4. கோதுமை மா

05. விரைவாகச் செய்திகளைத் திரட்டுவதில் அதிக பயனுடையது.
    1. செய்மதி 2. ரொக்கட்டுகள் 3. சிற்றலை 4. மீடிறன் அலை